உ

முருகா

# திருமந்திரம் – ஆறந்தம்

## நான்காம் நாள் சொற்பொழிவு

( 04–09–1999 )

பெரியோர்களே! எல்லாம் வல்ல வள்ளி மணவாளனது வற்றாத கருணை நலத்தாலே இந்த அற்புதமான திருமந்திரத் தொடர் சொற்பொழிவு என்னும் ஞான வேள்வியிலே நாம் இன்றைய தினம் நான்காவது கட்டமாக திருமந்திரத்தில் ஆறந்தம என்பது பற்றி பார்க்க இருக்கிறோம். எந்த வேள்வியும் நிறைவடைவது பூராண குதியில்—அதாவது நிறையவி நல்கலில். நாம் தொடங்கியுள்ள இந்த ஞான வேள்விக்குப் பூராணாகுதியாய் நாளை திருக்கூத்து தரிசனம் நடைபெறும். இன்று அதற்கு அடிப்டையாக உள்ள ஆறந்தத்தைப் பற்றி பார்க்க இருக்கிறோம்.

திருமந்திரத்திலேயே கடினமான பகுதி சூன்ய சம்பாஷனை பகுதி எவ்வளவி கடினதேப அதைவிட கடினமானது இந்த ஆறந்தம் என்ற பகுதி. ஆனால் திரு. தான்ஸ்ரீ ஐயா அவர்கள் இந்தப் பெரும்பொறுப்பை நேயர் விருப்பமாகக் கேட்டு என் தோளில் சுமத்தியிரக்கிறார். அதை என் நா சுமக்க வணங்கும் எனது ஆன்ம நாயகனான முருகனை வேண்டித் தொடங்குகிறேன்.

திருமூலர் ஆறந்தம் என்னவென்பதை முதலிலேயே தோற்றுவாய் செய்து விடுகிறார்.

வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்

நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்

ஓதத் தகுமெட் டியோகந்த அந்தமும்

ஆதிக் கலாந்தமும் ஆறந்த மாமே.

அந்தங்கள் என்னென்ன என்பதை இந்தப் பாடலில் கூறுகிறார். செய்யுள் என்பதால் அவற்றின் வரிசை முறை மாறியிருக்கிறது. அதை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். முறைப்படுத்தும் போது எது முன்னாலே எது பின்னாலே என்று நமக்குப் பல அறிஞர்கள், பெரியவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதன்படி இங்கே பார்ப்போம்.

1. யோகாந்தம்
2. கலாந்தம்
3. நாதாந்தம்
4. போதாந்தம்
5. வேதாந்தம்
6. சித்தாந்தம்

இது தான் படி முறை என்ற புவன கலை தீபம் என்னும் நூலும் புவன கரைல ஞான வளிக்கம் என்றும் நூலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாக நிரல் செய்திருக்கிறது. இவை இரண்டும் அந்தங்களைப் பற்றி மட்டும் எடுத்தக் கூறுவது. இந்நூற்கள் எங்கும் அவ்வளவாகக் கிடைப்பதில்லை. யாராவது பெற்றிருந்தால் அவர்கள் செய்த புண்ணியம் என்று தான் சொல்ல வேண்டும். உயர்நதநூல் யாரிடமு் அவ்வளவாக இருக்காதே. இது தானே உலகம்!

இங்கே நாம் யோகாந்தத்தை முதலிலே வைத்துச் சொன்னோம். ஆனால் முதலில் வருவது கலாந்ததந்தான் போலிருக்கிறதே என்ற சிலர் கூறலாம். ஏன்னா, ஆதிக் கலாந்தம் என்று இப்ப சொன்ன திருமந்திரப் பாடலிலேயே அப்படித்தானே வருகிறது? இது கேள்வி.

இதற்கு விளக்கம் கண்டால் தான் மூல ஆசிரியரின் கருத்து என்ன என்பது தெளிவுபடும். முதலில் ஆறந்தம் என்றால் என்ன என்பதைப் பற்றி ஒரு சிறு மன்னுரை—விளக்கவுரை சொன்னால் தான் புரியும். முதலில் இதன் அடிப்பைடயைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்ப நான் கலாந்தம் ஏன் ஆதிக்கலாந்தம் என்று அதுவே முதல் போலக் கூறப்பட்டுள்ளது என்பது தெரியும்.

பள்ளிகளில் எட்டாவது வகுப்பிற்கு ஒரு பாடத்திட்டம் (சிலபஸ்) வைத்திருப்பார்கள். 9வது வகுப்பு னெறதல் அதற்கு ஒரு பாடத்திட்டம் வைத்திருப்பார்கள். எட்டாவது வகுப்புப் பாடத்திட்டப்படி படித்துத் தேர்ந்தால் தான் ஒன்பதாவது வகுப்பு பாடத்திட்டப் படியான பாடம் புரியும். இதுக்குத் தான் வைப்பு முறை என்று பெயர். யாப்பு என்றும் சொல்வார்கள். நாலாவது வகுப்பு மாணவனுக்கு கால்குலஸ் கணக்கு சொன்னால் புரியுமா?

அதனால் இந்த ஆறந்தங்களுக்கும் அடிப்படை என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அதன்படி முறையாக மேலே மேலே சென்றோமானால் தெளிவாகப் புரிந்துவிடும்.

பெரியோர்களே! வாழ்க்கையில் நாம் சந்திக்கிற ஒவ்வொரு புதிய விஷயத்திலேயும் நாம நான்கு நிலைகளைச் சந்திக்கிறோம். ஒரு வகையில் உலகியலில் நாம் அடைகிற நான்கு நிலைகளைப் போலவே அருளியல் நிலையிலும் நான்கு நிலைகளைச் சந்திக்கிறோம். உலகியல், அருளியல் ஆகிய இதில் எதுவாக இருந்தாலும் இந்த நான்கு நிலைகளிலேயும் ஒவ்வொன்றாகத் தேறித் தேறித்தான் கடைநிலை அனுபவத்தை அடைய வேண்டும்.

இதன் அடிப்படையில் தான் இறைவனை அடைய பெரியோர்கள் நான்கு நிலைகளை வைத்துக் காட்டினார்கள். அவை 1) தாசமார்க்கம் 2) சற்புத்திர மார்க்கம் 3) சக மார்க்கம் 4) சன்மார்க்கம். தமிழில் இவற்றை 1) அடிமை நெறி 2) மகன்மை நெறி 3) தோழமை நெறி 4) நன்னெறி என்பர்.

இதில் தாசமர்க்கத்தை அப்பர் விளக்கிக் காட்டினார் சற்புத்திர மார்க்கத்தை ஞானசம்பந்தர் விளக்கிக் காட்டினார் சக மார்க்கத்தை சுந்தரர் விள்கிக் காட்டினார் சன்மார்க்கத்தை மணிவாசகர் விளக்கிக் காட்டினார். இப்படி நமக்க விளக்கப்பட்டு இந்த நான்கு நிலைகளிலே நாம் இறைவனை அடையலாம் என்று ஆன்றோர்கள் கூறினார்கள். இந்த நான்கு நிலைகளும் அருளியல் போலவே உலகியலுக்கும் பொருந்தும்.

தாச, சற்புத்திர, சக, சன்மார்க்கம் இன்னும் நான்கு நிலைகளிலே நாம் இறைவனை எப்படி அடைவது என்பது மிக ஆழமாகப் பார்க்க வேண்டியது. அது புரிய முதலில் நாம் உலகியலைப் பார்த்து விட்டோமானால் இது எப்படி அருள்நிலையில் அமைகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

உதாரணத்திற்கு ஒரு கிராமத்தான் கோழிப்பண்ணை வைக்க வங்கியில் கடன் வாங்குகிறான் என்று வைத்தக் கொள்வோம். அது மிகவும் சிறிய கிராமம். வங்கியை முதன் முதலில் இப்பத்தான் திறக்கிறார்கள். வங்கியில் லோன் மேளா திட்டம். யார் வேண்டுமானாலும் உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைக் காட்டி கோழிப் பண்ணை வைக்கக்கடன் பெறலாம். கிராமத்தில் இருப்பவர்களில் ஒருவர் இதைக கேள்விப்பட்டு வங்கிக்கு வருகிறார். துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டு பெரிய

மீசையுடன் சந்தன வீரப்பன் கணக்கிற்கு ஒரு கூர்க்கா வங்கி வாசலில் நிற்கிறான். பார்த்தாலே பயமா இருக்கு. எங்க வந்துட்டம், இது என்ன வங்கியா? இராணுவ முகாமா? ஆசாமி மெல்ல கிட்ட போய் இதுதானே வங்கி என்று கேட்கிறார்.

அவன் கட்டை குரலில் போர்டு பாக்கல இதுதான் வங்கி என்கிறான்.

என்ன வேணும்? அதட்டுகிறான் கூர்க்கா.

கோழிப் பண்ணை வைக்க லோன் வாங்க வந்திருக்கேன்

ஒரு சல்யூட் அடித்தக் கொண்டே சொல்கிறார் கிராமத்து ஆசாமி சப்தநாடியும் ஒடுங்க.

கோழிப் பண்ணையா? போய் அந்த மூலைல உக்காரு. ஏய்! ஏய்! எங்க போற? அது ஆட்டுப் பண்ணை கியூ.

உடனே பயந்து போய் மூலையில் பல்லி சுவற்றில் ஒட்டிக் கொண்டாற் போல ஒட்டிக் கொண்டு குந்தினாற் போல உட்காருகிறார் அந்த ஆசாமி. பாவம்! அவருக்கு யார் என்னன்னு தெரியாது! பயந்து பயந்து அக்கம் பக்கத்துல இருக்கறவங்க, அந்த கூர்க்கா எல்லாரிடமும் எப்பக் கூப்பிடவாங்க, எப்ப கூப்பிடுவாங்க என்று விசாரிக்கிறார்கள். யாரைப் பார்த்தாலும் அவரை அதட்டி உட்காரச் சொல்கிறார்கள். இதென்னடா வம்பாய் போச்சு. லோனும் வேணும். கீனும் வேணும்னு திரும்பிடலாமான்னு ஒரு எண்ணம். நப்பாசை யாரை விட்டது. மேனேஜர் எப்ப சரியா 10.30 மணிக்கு வந்தார்? அதுவும் அந்தக் கிராமத்தில் காத்திருந்து காத்திருந்து கடைசியில் காலை 11.30 மணிக்கு மேனேஜர் உள்ள போய் நாற்காலியில் உட்கார்ந்தார்.

இன்னைக்கு யார் யாரெல்லாம் லோன் வாங்க வந்திருக்காங்க வரச் சொல் மேனேஜர் தர்பார் ஆரம்பம்.

இந்த தர்பார் ஆரம்பிக்கறதுக்கள்ள இந்த ஆசாமி பட்ட பாடு. அடடா! இவனுக்கு முதல்ல இருக்கிறவன் எல்லாம் போய்விட்டு வந்த பிறகு தான் போகணும். அப்பப்பா மேனேஜர் வந்துட்டாரான்னு இவர் உள்ளே எட்டிப் பார்க்கிறதும் அங்கே போகிறவர் வருகிறவர் எல்லாம் இவரை அதட்டறதும். ஐயா! மேனேஜர் எப்ப வருவாங்க? சும்மா இருய்யா! அவரைத் தானே நானும் தேடிக் கிட்டிருக்கேன்.

இப்படி தேவடிந்த செல்வமாக மேனஜர் கடைசியில் வ்நதேவிட தர்பாரும் ஆரம்பமாயிற்று. இவர் முறைவந்ததும் உள்ளே போகிறார்.

மேனேஜர் நிமிர்ந்து கூட பார்க்காமல், உன் பெயர் என்ன? நான் உங்க பியூன் நாராயணசாமி சார்! பியூன் தன்னைக் கேட்டதாக எண்ணி பதில் கூற அவர் சப்தம் போட, இவருக்கு இந்த அமளியில் நாக்கு உலர்ந்து தன் பேரே மறந்துவிடுகிறது. தன் பெயரைச் சொல்லவே பயம். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நாகநாதன் என் பேர். நாகத்தைப் பார்த்துப் படையும் நடுங்குவது போக இங்கே இவர் நடுங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த ஃபாரத்தை ஃபில்லப் செய்தவிட்டு வா

எனக்கு படிக்கத் தெரியாதுங்க

அதோ அந்த மூலைல இருக்காரே ஒருத்தர். அவரிட்ட கொடுத்து ஃபில்லப் செய்துக்க

அவரோ பக்கத்திலிருந்து லேடி டைப்பிஸ்டிடம் சுவாரசியமாக பேசிட்டு இருந்தார் – ஏதோ அதுவே அவர் வேலை போல.

ஐயா! இதைக் கொஞ்சம் எழுதிக் கொடுங்க

என்னையா?

ஐயா! நீங்க தானே சோமசுந்தரம்?

ஆமாம். நான் தான் சோமசுந்தரம். அதுக்கென்ன இப்ப?

பயந்து நடுங்கி உரிய விண்ணப்பப் படிவத்தை நீட்டி விஷயத்தைச் சொல்கிறார் நாகநாதன்.

அவ்வளவு தானே! இப்ப என்ன அவசரம்? கோழிக்கும் ஆட்டுக்கும் எல்லாம் நான் ஆட முடியுமா? கொஞ்சம் உக்காரு. அப்புறம் நீ சொல்லும்மா! மத்தியானம் டிபன் என்ன கொண்டு வந்திருக்கே

பொறுமையாக இந்தக் கொடுமைகளை எல்லாம் சகித்துக் கொண்டு காத்திருந்த பின்விண்ணப்பப்படிவம் நிரப்பிக் கொடுக்கப்படுகிறது. யார் மேனேஜர், யார் கிளார்க், யாரிடம் கொடுக்க வேண்டும் என்று தெரியாமல் ஒருவராகப் பார்த்து ஒவ்வொருவரிடமாக வசவு வாங்கிக் கட்டிக் கொண்டு கடைசியில் உரியவிடம் அந்த விண்ணப்பப் படிவத்தைக் கொடுக்கறதுக்குள்ள அவரக்கு உயிர் போய் உயிர் வந்தது.

கையெழுத்துப் போட்டுட்டியா? ஒரு அதட்டல்

ஊம் போட்டுட்டேங்க

சரி வரும்—போ

திரும்பும் போது எல்லார்க்கும் கும்பிடு போட்டுவிட்டு மற்ககாமல் அந்த கூர்க்காவிற்கும் ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு—அவர் முஃசைக்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு வீடு திரும்புகிறார் அந்த ஆசாமி நாகநாதன்.

ஒரு மாதம் ஆயிற்று, போஸ்ட் ஆபிசே இலர்லாத ஊர். எப்படியோ ஒரு போஸ்ட்மேன் வந்து நாகநாதன் இங்க யாருன்னு கேட்டு அவருக்கு வங்கியிலிருந்து கோழிப் பண்ணை வைக்க கடன் அனுமதித்த கடிதத்தைக் கொடுததுவிட்டுப் போகிறார். நாகநாதனுக்குப் படிக்கத் தெரியாததால் அக்கம் பக்கத்திலிருக்கிறவர்களை அணுகிப் படிக்கச் சொல்லி கேட்க உனக்கு லோன் சாங்க்ஷன் ஆயிருக்காம் என்று சொல்ல ஒரே சந்தோஷம். அப்பவே அவனுக்கு வீடு முழுவதும் கோழி நிறைந்து கொக்கரித்துக் கொண்டிருப்பதாக ஒரு மாயத் தோற்றம்.

கடிதத்தை எடுத்துக் கொண்டு வங்கிக்குச் செல்கிறார் நாகநாதன். இப்ப அவர் மனநிலையே வேறு, அங்கே வாசலில் அதே கூர்க்கா நிற்கிறார். யாருய்யா நீ அவர் அதட்டுகிறார். அட சும்மா இருங்க! எனக்கு லோன் சாங்ஷன் ஆயிருக்கு என்று கூர்க்காவைத் தாண்டி விறுவிறுனனு—முன்னே மூலையில் காத்திருந்தவர்—இப்ப வந்தவுடன் மேனேஜரிடம் வந்து பணமும் வாங்கி விடுகிறார். அந்தப் பணத்தை வைத்து ஒரு சிலர்போல வட்டிக்கு விடாமல் உண்மையிரேயே கோழிப் பண்ணை வைக்கிறார். கோழிப்பண்ணையைச் சரிவரப் பராமரித்து அதிலே கொஞ்சம் லாபம் சம்பாதித்து நேர்மையாகக் கடன் தவணைகளைச் செலுத்த அடிக்கடி வங்கிக்குச் செல்கிறார். இப்படி அவர் அடிக்கடி வங்கிக்குச் சென்று வருவதால் சோமசுந்தரம் கிளார்க் பழகிவிடுகிறார். இவரைப் பார்த்து காபி சாப்பிடுகிறீர்களா என்று உபசரிக்கும் அளவிற்கு நெருக்கம் வளர்ந்துவிடுகிறது. இன்னும் வங்கியில் உள்ள ஏனையோரும் பழகி விடுகின்றனர். எல்லோரும் இவரை நேர்மையாக நடந்து கொள்கிறார் தவறாமல் பணத்தைக் கட்டி வருகிறார் என்று பாராட்டுகிறார்கள்.

இந்த நிலையில் கோழிப் பண்ணைக்குக் கடன் வாங்க புதிதாக ஒருவன் வருகிறான். அவனுக்கு யார் ஷீரிடி (Surety) போடுவது? இவர் போட்டால் வங்கிக்கடன் தரலாம் என்று அங்கு உள்ளவர்கள் கூற இவரும்

புதிதாக வந்தவனுக்கு ஷீரிடி போட்டுக் கொடுக்கிறார். அவனுக்க கடன் அனுமதி கிடைத்து விடுகிறது. இப்ப நாகநாதனுக்கு வங்கியில் உள்ள செல்வாக்கே தனி.

ஆரம்பத்தில் வங்கிக்கு உள்ளே நுழையவே எப்படிப் பயந்தார்? யார், யார் என்பது தெரியாமல் பார்த்தவர்களுக்கெல்லாம் வணக்கம் போட்டார். அப்போது அவர் ஓர் அடிமை போல இருந்தார். இதுதான் தாசமார்க்கம்.

அதன்பின் அவருக்கு கடன் அனுமதி கிடைத்து விடுகிறது. கூர்க்காவிடம் உள்ளே விடு என்று உரிமையுடன் சொல்லி வங்கிக்கு உள்ளே புகுகிறார். அந்த அனுமதிக் கடிதம் அவருக்கு உரிமையை வழங்கி விடுகிறது. உரிமையுள்ள மகன் தந்தையிடம் நெருங்குவது போல உள்ள நிலைமை இது. எனவே இது மகன்மை நெறி. அதாவது சற்புத்திர மார்க்கம் என்று வடமொழியில் கூறினர்.

அதன் பின்னால் நேர்மையாகக் கடன் தவணைகளைச் செலுத்தும் வகையில் வங்கியில் உள்ள யாவரிடமும் நன்கு பழகி விடுகிறார். இது தோழமை நெறி. அதாவது சக மார்க்கம் என்றனர்.

கொஞ்ச காலத்தில் வங்கியில் இவர் கையெழுத்துப் போட்டால் பிறருக்குக் கடன் கொடுக்கும் அளவில் வங்கிக்குச் சமமாக வளர்ந்து விடுகிறார். இது சன்மார்க்கம் என்னென்னும் நன்னெறி நிலை.

இது போன்ற தான் எல்லாம். ஒரு டெலிபோன் கட்டணம் கட்டப்போனால் கூட இந்த நான்கு நிலைகளையும் தாண்டித்தான் அனுபவம் வரும். முதலில் எங்கே கட்டுவது என்று கேட்டு அலைவது பிறகு எந்த கியூ என்று அலைவது. நான் மைலாப்பூர் என்பான். அவன் இது வண்ணாரப்பேட்டை கியூ, அங்க போய்யா என்று கத்துவான். பயந்து பயந்து ஒரு கியூவில் நின்று இதுபற்றி எல்லாம் தெரிந்து கொண்டதும் இவன் புதிதாக வருகிறவனுக்கு வழிகாட்டுவான். எல்லாவற்றிலும், இந்த தாச, புத்திர, சக, சன்மார்க்க நிலை உண்டு.

ஒருவன் இசை கற்றுக் கொள்ள ஒரு பாடகரிடம் போகிறான். பயந்த நிலையில் செல்கிறான் சீடன் ஆகிறான். சீடன் என்று உரிமை கொண்டாடகிறான். பாடகருக்குப் பாட இவன்மூலம் வாய்ப்பு வாங்கித் தருகிறான். பாடகரிடம் பழகி அவரோடு இணைந்து கச்சேரி செய்கிறான். பின்னால் வாத்தியார் தளர்ந்து போகிறார். இவன் அவரிட்ததைப் பிடித்து அவரது சாயல் முழுமையும் இவனிடம் இருக்கிறது என்று பலரும் கூற அவருக்குச் சமமாகி விடுகிறான். சில நேரங்களில் வாத்தியாரையும் மிஞ்சி விடுகிறான். வாத்தியாருக்குக் கிடைக்கம் வாய்புக்களை வனே தட்டிப் பறிதலுதுக் கொள்கிறான். அவருக்கு வயசாயிடுச்சு பாடினால் காத்துத் தான் வருதுன்னு சொல்லி வாத்தியார் வாய்ப்பை அவனே பெறுகிறான். இது கடைசி நிலை.

இப்படி உலகில் எந்தப் பொருளை அடைவதிலும் இந்த நான்கு நிலைகளும் தவறாமல் இடம் பெறுவதைப் பார்க்கிறோம்.

இந்த நான்கு நிலைகளும் உலகியலில் மட்டுமல்லாமல் பரம்பொருளை அடைவிக்கும் அருளியல் நெறியிலும் உண்டு. இதைத்தான் தாசமார்க்கத்திற்கு அப்பர் என்றும், சன்மார்க்கத்திற்கு மாணிக்கவாசகர் என்றும் அவரவர் நிலையில் பெரும்பர்னமை பற்றித் தனித்தனியே உதாரணம் காட்டி ஆன்றோர்கள் விளக்கினர்.

இந்த நான்கு நிலைகளையும் நன்கு அறிந்து கொண்டால் தான் ஆறந்தத்தின் அடிப்படை நமக்கு எளிதில் விளங்கும்.

பெரியோர்களே! ஆண்டவனை நாம் அடைய வேண்டுமானால் 36 தத்துவங்களையும் தாண்டிச் செல்ல வேண்டும்.

ஆறா றையும் நீத் ததன்மேை னிலையைப்

பேறா அடியேன் பெறுமா றுளதோ

என்று அருணகிரியார் கந்தரநுபூதியில் பாடினார். ஈறாறு முப்பத்தாறு தத்துவங்களையும் நீத்துத்ததான் மேலான பரம்பொருளை அடைய வேண்டும். எப்படி கோழிப் பண்ணைக்கு என் முதன் முதலில் வங்கியல் நுழைந்தானோ அப்படி ஒவ்வொரு தத்துவமாக நுழைந்து தங்கி அதன்பின் அதன் மேலே போய் அடுத்த தத்துவத்திற்குப் போக வேண்டும். ஒவ்வொரு தத்துவமாக பார்த்துப் பயந்து உ்ளளே நுழையலாமா வேண்டாமா என்று சிந்தித்து நுழைந்து அதோடு பழகித் திளைத்து அதன்பின் அடுத்த தத்துவத்திற்கு மேலே ஏற வேண்டும். இப்படி முப்பத்தாறு தத்துவங்களை ஒவ்வொன்றாகத் தாண்டிச் செல்ல வேண்டும். இதைத் தேதி தத்துவம் என்ற உபநிடதங்கள் கூறுகின்றன.

அதாவது முதலில் ஒரு தத்துவத்தில் நுழைய வேண்டும். பிறகு அதுவே முடிவில்லை என்று உணர்ந்து மேலேறல் வேண்டும். இவ்வாறு இது இல்லை, இது இல்லை, இதற்கு மேலே போவோம் என்று போவதைத் தான் நேதி, நேதி என்று உபநிடதங்கள் கூறின.

இந்த முறைமையில் முப்பத்தாறு தத்துவங்களையும் முன்னர்க்கூறிய நான்கு நிலைகளின் அடிப்படையில் கடப்பதை உண்மை நெறி விளக்கம் மூன்று வகையாகச் சுருக்கி விளக்குகிறது.

அதாவது முதலில் நாம் எதோடு தொடர்பு கொள்கிறோமோத அதோடு அதன் வண்ணமாகவே மாறி நிறறல். ணஒன்றின் வண்ணம் என்பதை ரூபம் என்று வடமொழியில் சொல்வர். எந்த ரூபத்தோடு தொடர்பு கொள்கிறோமோ அதன் ரூபமாகவே ஆகிவிடுதல். அதில் திளைத்த பிறகு அது என்ன என்று தெரிந்து விடும். தெரிந்த பின் இது இவ்வளவு தானா என்று அதை நீங்கி மேலே போதல். இதனை உண்மைநெறி விளக்கம் இவ்வாறு 3 வகையாகப் பேசுகிறது. அவை 1) ரூபம் 2) தரிசனம் 3) சுத்தி. இதையே தமிழில் உருவம், காட்சி, நீங்கல் என்பர்.

முதலில் ஒன்றிற்கு அடிமையாகி அதன்பால் உரிமை உறவை வளர்த்தக் கொள்வது அதன் வண்ணமாய் நிற்கும் ரூபநிலை. பின்னர் அது என்ன, தான் யார், தனக்கும் அதற்கும் உள்ள தொடர்பு என்ன என்று புரிந்து பழகுதல் தரிசன நிலை. பின்னர் அதை விட்டு மேலேறல் நீங்கல் என்ற சுத்திநிலை. அதாவது ரூப நிலையில் தாசமார்க்கமும், சற்புத்திர மார்க்கமும் அடங்கி விடுகிறது. அதன்பின் தரிசன நிலையில் தான்யார், அது எது என்ற பார்வை கிடைத்துப் பழகுவதால் அது சகமார்க்கம் ஆகிவிடுகிறது. பிறகு அதைவிட்டு மேலேறல் என்னும் சன்மார்க்கம் என்று பேசப்பட்டு இங்கே அது சுத்தி நிலையாகக் கொள்ளப்பட்டது. எனவே தாச, புத்திர, சக, சன்மார்க்கம் என்ற நான்க நிலைகளை உண்மை நெறி விளக்கம் மூன்றாக–தோவது ரூப, தரிசன, சுத்தி என்ற நிலைகளாகச் சுருக்கிக் காட்டியது.

(கூட்டத்திலிருந்து ஒருவர் நூல் பெயர் உண்மை விளக்கமா என்று கேட்கிறார்.)

உண்மை விளக்கம் என்பது மனவாசகம் கடந்தார் என்ற ஆசிரியர் பாடிய சாத்திரநூல். இப்போது நான் சொன்னது உண்மைநெறி விளக்கம் என்ற சாத்திர நூல். இது உமாபதி சிவத்தால் அருளப்பெற்றது. இதில் பேசப்படும் தசகாரியம் என்பது இந்த ரூப, தரிசன, சுத்தி என்ற நிலைகளில் காட்டப்பெற்றன. தசகாரியம் என்பது இறைவனை அடையும் நெறியை பத்து வகைகளில் கூறுவத. அவை

1. தத்துவரூபம்
2. தத்துவ தரிசனம்
3. தத்துவசுத்தி
4. ஆன்மரூபம்

5. ஆன்ம தரிசனம்
6. ஆன்ம சுத்தி
7. சிவரூபம்
8. சிவ தரிசனம்
9. சிவ யோகம்
10. சிவபோகம்

சிவபோகத்தோடு முடிந்துவிடும். அதற்கு மேல் நிலை கிடையாது. சிவத்தோடு இருந்து ஆனந்தம் அனுபவிக்க வேண்டியது தான்.

மண்முதல் சிவம தீறாம் வடிவுகாண் பதுவே ரூபம்

மண்முதல் சிவமதீறாம் மலம்சடம் என்றல் காட்சி

மண்முதல் சிவமதீறாம் வகைதனில் தான்நிலாது

கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதுமன்றே.

இது உண்மைநெறி விளக்கப் பாடல். இம் மாதிரிப் பாடல்களை எல்லாம் இது போன்ற இடங்களில் தானே கேட்கமுடியும். இந்த அருள்நெறித் திருக்கூட்டத்தில் வந்து உட்காருவதற்கே சிவபெருமான் அருள் வேண்டும். இந்த ஊரிலே இருக்கிற உள்ள அத்தனை பேருமா இங்கு வந்திருக்கிறார்கள்? இங்கே வந்து அமேரவே ஒரு நல்லூழ் வேண்டாமா? அது ஒரு பிறமிருக்கட்டும்.

நம்முடைய லட்சணம் என்ன தெரியுமா? இதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது இந்த முயற்சிகளை மேற்கொள்ளும் ஜீவனது பருப்பொருள் தன்மை என்ன—அதாவது அதன் அளவு என்ன தெரியுமா? அது எந்தப் பரிமாணத்தில் இருக்கிறது என்பதை யாராவது துல்லியமான துலாக்கோல் தட்டில் வைத்து அளந்து சொல்ல முடியுமா? உலகத்தில் ஏனைய பொருள்களை எல்லாம் அளக்கக் கருவிகள் உண்டு. இதற்கு உண்டா? திகைக்கிறோம். இந்த நேரத்தில் நமக்குக் கை கொடுப்பவர் திருமூலர்தான். உயிரின் நீள அகலங்களை அளந்து சொல்கிறேன் கேள் என்று அவர் ஒரு பாடல் பாடுகிறார் அதைக் கேளுங்கள்

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்

கோவின் மயிரொன்று நூறுடன் கூறிவிட்டு

மேவிய கூறது ஆயிர மாயினால்

ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே

இந்தப் பாடல் திருமந்திரத்தில் ஏழாம் தந்திரத்தில் வருவது. இப்படி வேறு எந்த சமயமும் சொல்லவில்லை. பைபிளில் இல்லை குர் ஆனில் கிடையாது சைவ சமயத்தில் மட்டும் தான் உள்ளது. அதுவும் திருமூலர் திருமந்திரத்தில் தான் உண்டு. இந்தப் பாடல் என்ன சொல்கிறது?

மாட்டினுடைய வாலிலிருந்து ஓர் உரோமத்தை எடுத்தக் கொள். அதை ஆயிரம் கூறாக கூறுபோடு நெடுக்காக போடு குறுக்காக அல்ல. போட்டாச்சா? அந்த ஆயிரம் கூறையும் மேலும் நூறாயிரமாகக் கூறுபோடு. நூறாயிரம் என்றால் ஒரு லட்சம். அந்த ஒரு லட்சம் கூறில் ஒன்று தான் உயிரின் அளவு—அதாவது நாம் என்கிறார் திருமூலர். இது தான் நம்ம லட்சணம் என்கிறார் திருமூலர்.

இவ்வளவு சிறிய ஆன்மா தான் முப்பத்தாறு தத்துவங்களையும் தாச, புத்திர, சக, சன்மார்க்க நெறி முறையை அடிப்டையாகக் கொண்டு மேலேறி தச காரியம் சாதித்து இறைவனை அடைய வேண்டும். இது எவ்வளவு கடினம்? இதற்கு எத்தனை பிறவிகள் ஆகுமோ?

இதைத் தான் மாணிக்கவாசர், புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகி பல் விருகமாகிப் பறைவயாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராயப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய் செல்லலா அநின்ற இத்தாவர சங்கம்துதுள் எத்தனை எத்தனை பிறவி எடுத்தேனோ, என்னென்னவாய் இருந்தேனோ, எப்படியெல்லாம் வாழ்ந்தேனோ என்று பாடி அலமருகின்றார்.

இந்த நடுக்கம் அருளாளர்களுக்கெல்லாம் அவர்களது அருள் முயற்சியில் ஏற்படும். தாயுமானவர் கூட அப்பிறவி த்பிபனால் ஏ்பிபறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன் என்று பாடிப் பயப்படுகின்றனர். சென்றது முடிந்தது அடுத்து என்ன? என்கிறதார். இப்பிறவி முடிந்தால் இனி அடுத்த பிறவி ஏதோ என்று தாயுமானவர் கவலைப் படுகிறார். இதை நினைத்து அவரது நெஞ்சம் பகீரென நடுங்குகின்றதாம். ஆனால் நாம் இதைப் பற்றிக் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்வதில்லை. நிம்மதியாக உறங்குகின்றோம்.

சரி! இப்படிப் பலபிறவிகள் எடுத்து, எடுத்து, இளைத்து, இளைத்து இன்று இந்த மானிடப் பிறவி எடுத்துக் கடவுளாவது மண்ணாவது என்று காலத்தைக் கழித்து ஏதோ ஒரு நல்லூழால் தெய்வ அருள் வாய்க்கிறது. அருள் பெறும் அந்நிலையில் அருள் முயற்சிகளில் ஈடுபடும் போது நம்மைக் குழப்புவதற்கென்றே நூறாயிரம் பேர் வருவார்கள். இதை நான் சொல்லவில்லை. மாணிக்கவாசகர் சொல்கிறார்.

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி

முனிவிலா ததோர் பொருளது கருதலும்

ஆறுகோடி மாயா சத்திகள்

வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.

பலவிதமான நம்மைக் குழப்புவான் விபூதி கொடுத்து நம்முடைய பிரச்சினைகளை எல்லாம் தீர்கிகறேன் என்று விபூதி எடுத்து வந்து விசித்திரம் செய்து ஏமாற்றுவதன். நமக்கு இல்லாத பிரச்சினையா? ஒன்றா, இரண்டா? பலப்பல பிரச்சினைகள். நாம் அவங்கிகட்ட போகலான்னாலும் அவன் டிவியில் வந்து குழப்புவான். போததற்குச் சிலர், உங்க பிரச்சினை தீரணும்னா மேல் மருவத்தூருக்குப் போங்க என்பான். உடனே மேல் மருவத்தூருக்குக் கிளம்புவான். வேட்டி சிவப்பு வேட்டியாகும். கொஞ்ச நாள் கழித்து இன்னொருத்தன் மெல்ல வருவான். ஏன் சார்? அங்க போய்ட்டு வரேன் என்கிறான் இவன். அதெல்லாம் விடுங்க சார்! வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை மாங்காடு போய் வாங்க! நிச்சயம் பலன் கிடைக்கும். வெள்ளிக்கிழமை தோறும் மாங்காட்டிற்குப் போக ஆரம்பிப்பான். சிவப்பு வேட்டி கலர் மாறி பச்சை வேட்டி ஆகிவிடும். அப்புறம் இந்த விரதம்—அந்த விரதம்! ஒவ்வொருத்தர் இவனை ஒவ்வொரு விதமாக அலைப்பர்.

விரதமே பரமாக வேதியர்

சரதமாகவே சாத்திரம் காட்டினர்

இதுவும் மணிவாசகர் வாக்கு. இப்படி நம்மைக் கெடுப்பதற்கென்றே பலபேர் இருப்பார்கள்.

உனக்கு இது நடக்கணம்னா, இந்த விரதம் இரு.

உடனே சங்கடஹர சதுர்த்தி விரதம் இருப்பான். இன்னொருத்தர் ராகுகால பூசையின் மகிமையைச் சொல்வார். உடனே பெண்கள் கூட்டம் அங்கே மொய்க்கும். இப்ப ராகு கால பூசை எங்கள் ஊரில் (ஆகிவிட்டது) வேகமாக வளர்ந்து விட்டது.

திருநாகேசுவரத்தில் போய் பார்த்தீங்கன்னா திருநாகேஸ்வரர் தனியாக அம்போ என்று இருக்கிறார். ராகுவின் இடத்திலே ஒரே கூட்டம். சுமார் 500,600 பேர் டிக்கட் வாங்கி ராகுவிற்குப் பூசை செய்கிறார்கள். நான் அந்தக்கோயில் நிர்வாக அதிகாரியை இவ்வளவு பேரும் திருநாகேஸ்வரருக்கு பூசை செய்துவிட்ட இங்கு வந்து ராகுவிற்குப் பூசை செய்கிறார்களா என்று கேட்டேன். அவர் இல்லை என்றார். சுவாமிக்குப் பூசை செய்ய எத்தனை டிக்கட் போச்சு என்று கேட்டேன். மொத்தம் ஏழு என்றார். அடபாவமே! சாமிக்கு 7 ராகுவிற்கு 500. பாவம்! மக்கள் தேர்வில் சாமி குறைந்த ஓட்டு வாங்கித் தோற்றுவிட்டார். சாமிக்கு டெபாசிட் கூட கிடைக்காது போலிருக்கிறது. இதில் வேடிக்கை என்ன என்றால் இந்தத் தலத்தில் ராகு திருநாகேஸ்வரரை பூசித்து தனது தோஷம் நீங்கப் பெற்றான் என்பது வரலாறு. கடவுளே!நாம் எங்கே போகிறோம்?

இதைத் தான் ஆறு கோடி மாய சத்திகள், வேறு வேறுதம் மாயை தொடங்கின என்று கூறினார் மாணிக்கவாசகர். எது உண்மையான சமயநெறி என்று அறிந்து வந்து சேர்வதற்கே ஊழ்வினை இருக்க வேண்டும். உங்களுக்கெல்லாம் நல்ல ஊழ்வினை இருப்பதால் தான் இங்கே வந்து சேர்ந்துள்ளீர்கள்.

இப்படி நல்ல ஊழ் பெற்ற வரவானேயானால் மெல்ல மெல்ல அவன் யோக நெறிக்கு உந்திச் செலுத்தப்பட்டு யோகம் செய்வதற்கு எண்ணம் தோன்றும்.

யோகம் என்ற வடமொழிச் சொல்லிற்கு சேர்தல் என்று பொருள். இறைவனுடைய அடியைச் சேர வேண்டும்—அதைச் சார வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் மேலோங்கி நிற்கும்.

அப்படி இறைவனுடைய அடியைச் சேர யோகப் பயிற்சி செய்ய வேண்டும் என்று தொடங்கினால் அதிலே பலவகை!

ராஜயோகம், கருமயோகம், அடயோகம் எனப் பலப்பல. இங்கேயும் குட்டையைக் குழப்பிப் பலர் மீன் பிடிக்கக் காத்திருப்பார்கள் சார் உங்களுக்கு குண்டலினி சத்தியை மேலெழுப்ப வேண்டுமா? ஆமாம் என்றால் அதற்குக் கட்டணத் ரூ100 என்பான் விளம்பரம் செய்வான். குண்டலினி சத்தியை எழுப்புவதற்கு நூறு ரூபாய் மக்களை எப்படியெப்படி எல்லாம் ஏமாற்றுகிறார்கள்! நூறு ரூபாயைக் கட்டணமாக வாங்கி எழுப்பப் படுவதா குண்டலினி சத்தி! காய்கறி விற்பது மாதிரி கூவி இதை விற்கிறானே பாவி!

நம்முடைய இளைஞர்கள் பலர் அங்கே போவார்கள். என்னடா! உலகம் திருந்திவிட்டதா? யோகம் பயில இளைஞர் கூட்டம் இவ்வளவா? என்று பார்த்தால் பிரம்மகுமாரிகள் என்ற பெயரில் அங்கே இளம் பெண்கள் யோகப் பயிற்சி டீச்சர்கள்!

(ஒருவர் கூட்டத்திலிருந்து அது இங்கேயும் உண்டு என்கிறார்)

இங்கேயும் அது உண்டா? எந்த நாட்டிற்குப் போனாலும் அந்தப் பீடை விடாது போலிருக்கிறது! பெண்கள் சொல்லித் தருகிறார்கள் என்றதும் உடனே இளைஞர்களுக்கு ஒரே ஆர்வம். ஓட்டமா ஓடி வரான்! இதை என்ன சொல்ல?

முதலிலே யோகம் செய்யலாம் என்று எண்ணுவதே நல்ல சிந்தனை தான். ஏதோ நல்லூழினால் நல்ல சிந்தனையோடு தான் அவன் இங்கே வருகிறான். அவன் சிந்தையைச் சிதைக்கப் பல மாயா சத்திகள்! இதைத் தான் மணிவாசகர் சொல்லி வருத்தப்படுகிறார்.

திருமந்திரத்திலே கூட பல யோகங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது மூன்றாம் தந்திரத்திலே. அத்தனையும் சொல்லி நான் பரிந்துரைக்கும் யோகங்கள் இவையல்ல. நான் போற்றிச் சொல்லும் யோகம் சிவயோகம் என்று பிரித்தெடுத்து அறிவுறுத்துகிறார்.

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருஜக்கினும்

கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை

உண்ணாடி உள்ளே ஒளிபெற நோக்கிடின்

கண்ணாடி போலக் கலந்திருந் தானே!

சிவயோகம் ஒன்று தான் கண்ணாடி போல இறைவனைக் காட்ட வல்லது. சிவயோகம் என்பது மூச்சு பயிற்சியிலே இல்லை. யோகம் என்றவுடனே என்ன நினைக்கிறோம்? மூச்சை அடக்கி உள்ளே இஅரசகம், பூரகம், கும்பகம் என்று சொல்லி ஒவ்வொன்றிற்கும் கணக்க எண்ணிச் சொல்லி அதன் அடிப்படையில அடைவதே யோகம் என்று நினைக்கிறோம். இதைப் பற்றி எல்லாம் இந்தக் கணக்குகள் எல்லாம் திருமந்திரத்திலேயும் வருகிறது. கேசரி யோகம் என்று ஒன்று உண்டு. கேசரி என்றால் சிங்கம் என்று பொருள். நமக்குத் தெரிந்த இன்னொரு கேசரியும் உண்டு அது ரவா கேசரி. இதற்கும் யோகத்திற்கும் எந்த விதச் சம்பந்தமுமில்லை. இதைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமை. ஏனென்றால் பின்னாளில் ரவா கேசரி சாப்பிட்டு விட்டு இந்த யோகம் செய்யப்பட வேண்டும் என்று குழம்பினாலும் குழப்பக் கூடும்.

இந்த யோகத்தில இன்னொன்று உண்டு. உள்நாக்கை நுனி நாக்குத் தொடும் படி உ்ளளே வைத்து மேல்நோக்கிப் பார்த்தவாறு செய்வது ஒரு வகை யோகம். இப்படிச் செய்தால் வீட்டில் இருப்பவர்கள் நம்மை ஒரு மாதிரி பார்க்க் ஆரம்பித்து விடுவார்கள். இது வரைக்கம் நல்லாத்தான் இருந்தார். எங்கேயோ போய் யோகம் கத்துக்கிட்ட இந்த மாதிரி ஆயிட்டார் என்பார்கள். இந்த யோகத்தில் ஒரு ஆசனம் பேசப்படுகிறது. அதாவது விபரீத யோக கரணி. பேரே சரியில்லை பாருங்கள்!

எனவே தான் திருமூலர் சொன்னார்—சைவர்கள் செய்ய வேண்டியது தியானரோயகமே. இதற்குப் பெயர் சிவயோகம் என்று பெயர். சிவயோகம் என்பது கண்ணில் இரந்து தொடங்குவது. மூச்சிற்கும் அதற்கும் சம்பந்நமில்லை. உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கு என்றார் திருமூலர்—நோக்கு என்பது கண் பார்வையகைக் குறிப்பது.

திருமூலரின் ஞானப் பேரர் அருணகிரியாரும் இதையே கந்தரலங்காரத்தில் வலியுறுத்தினார். திருமூலநாதருடைய அம்சம் அருணகிரிநாதர் என்று ஒரு கர்ண பரம்பரை வழக்கு உண்டு. இதை ஒரு பேச்சுக்குச் சென்னனேனே ஒழிய நம்பத்தக்கது இது என்று நான் சொல்லவில்லை. அவர் எந்தக் காலரத்தவரோ? இவர்ளந்தக் காலத்தவரே? இருவரையும் தொடர்புபடுத்திப் பேசுவதும் உண்டு என்பதற்காக இதைச் சென்னன்னே. இருவரும் ஒரே கருத்தப்பட எடுத்துக் கூறுகிறார்கள்.

அதற்காகச் சொன்னேன். அருணகிரியார், கந்தரலங்காரத்தில்,

துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்(து)

அருத்தி உடம்பை ஒறுக்கில் என்னாம்? சிவயோகமென்னும்

குருத்தை அறிந்து முகம் ஆறுடைக் குரு நாதன் சொன்ன

கருத்தை மனத்தில் இருந்தும் கண்டீர்முத்தி கைகண்டதே

சிவயோகத்தால் வீட்டினுள் (முத்திப்பேற்றில்) நுழைவது மிகவும் எளிமே என்றார். இது ரொம்பச் சுலபம்! இதைவிட்டு ஏன் மூச்சைப் பிடித்து ஏற்றி, இறக்கி, எண்ணி அவத்தைப் பட வேண்டும்?

மூச்சைப் பிடிப்பதனால் பலன் இல்லாமல் இல்லை அதற்குரிய பலன் உண்டு. மூச்சைப் பிடித்தச் செய்வது ஒரு படிதானே தவிர அதுவே நேராக இறைவனை அடைவிக்காது. அதன் பலன் வேறு. இவையனைத்தும் திருமந்திரத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன. யோகம் என்றால் இவை இவை உண்டு இதில் நீ மேற்கொள்ள வேண்டியத இது என்று அந்தப் பாங்கை எடுத்துக் கூறுகிறார்.

நாம் இதையெல்லாம் படிக்கிறோம். ஆனா திருமூலர் எதை பண்ணச் சொல்கிறாரோ அதை விட்டு விடுகிறோம். திருமந்திரத்துர இது வருதா சார், அது வருதா சார் என்று கேட்டுக் கேட்டுக் கடைசியில் கேசரியைக் கிளறிவிட்டு இருப்பான்.

திருமூலர் தெளிவாக நமக்குச் செல்கிறார். உள்நாடி உள்ளே ஒளி பெற நேக்கிடின் இதை நாம் கவனிப்பதில்லை.

சிவயோகம் கண் தொடர்புடையது என்பதை திருமூலர் மட்டுமா சொன்னார்? மாணிக்க வாசகரும் சொன்னார்.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா

விழுப்பொருளே உன தொழுதபடி யோகங்கள்

மண்ணகத் தேவந்து வாழச்செய்தானே

வண்திருப் பெருந்துறை யாய் வழியடியோம்

கண்ணகத்தே நின்று களிதரு தேனே

கடலமுதே கரும் பேவிரும் பாடியார்

எண்ணகத்தாய் உலகுக்குயி ரானாய்

எம் பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

இந்த தீரவெம்பாவைப் பாடலில் கண்ணகத்தே நின்று களிதருதேனாக இறைவன் கிடைக்கிறான் என்று கூறப்பட்டது—தோவது சிவயோகம் கண்ணகத்தே நின்று அடைவது என்று கூறப்பட்டது. இந்தப் பாடலிலே ஒர் அழகு! எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே என்று எம்பெருமானை விளித்துப் பாடுகிறார். எம்பெருமானே! என்று விளிக்கவில்லை. எம்பெருமான்! என்று விளிக்கிறார். தூரமாக உள்ள ஒருவரை சங்கரா! வா! என்று கூப்பிடுவர். இதற்கு சேய்மைச் சுட்டு என்று பெயர். கிட்ட இருந்தால் சங்கு என்று கூப்பிடுவர். இதற்கு அண்மைச் சுட்டு என்று பெயர். நெருக்கமாக இருப்பவரை நீட்டி அழைக்க

வேண்டியதில்லை. மாணிக்கவாசகருக்கு சிவயோகம் காரணமாக இறைவன் நெருக்கமாக வந்துவிட்டானாம்! அதனால் எம்பெருமானே என்னாமல் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே என்றார். ஒவ்வொரு சொல்லிலும் எவ்வளவு நுட்பம்!

இனி, கண்ணகத்தே இருந்து யோகம் எப்படித் தொடங்குகிறது என்பதைப் பார்ப்போம். இங்கே உங்கள் திருவடிகளைத் தொட்டு ஒரு விண்ணப்பத்தை வைக்கிறேன்—ஒரு இரண்டரை மணி நேரம் செலவு செய்து ஒரு சொற்பொழிவைக் கேட்கிறோம் என்றால் அதற்குப் பலன் கிட்ட வேண்டும்—எனவே உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். தினமும் 5 நிமிடம் கண்மூடித் தியானப் பயிற்சி செய்யுங்கள். அது ஒன்றே உங்களைக் கடைத்தேற்றும்.

முதலில் கண்மூடித் தியானத்தைத் தொடங்கும் போது எண்ணங்கள் எல்லாம் எங்கெங்கேயோ ஓடிக் கொண்டிருக்கும். அப்போது தான் ஒருத்தன் வந்து பெல் அடிப்பான் பத்திரிகை போடுவான் பால் கொண்டு வருவான். இதையெல்லாம் பார்த்துவிட்டு மீண்டும் அப்பாடா என்று உட்கார்ந்தால் வேலைக்காரி கதவைத் தட்டுவாள். இத்தனையும் மீறி தியானம் செய்ய வேண்டும். இதில் எது உசிதமான நேரமோ அதைத் தொந்தெடுத்துக் கொள்ளுங்கள். நேர விஷயம் முடிந்தாயிற்று. அடுத்து தியானத்திற்கு உரிய உருவத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பெரியோர்களே! கோவிலில் பல உருவங்கள் உள்ளன. அந்த உருவங்களில் சிறந்ததான ஓர் உருவத்தைத் தேர்ந்தெடுத்து அந்த உருவத்தை மெல்ல மெல்ல மனத்தில் கொண்டு வர வேண்டும். ஒரு முறை தேர்ந்தெடுத்தபின் உருவத்தை மாற்றிக் கொண்டே இருக்கக் கூடாது.

கோயிலுக்குச் செல்வோமானால் கருவறை வெளிச்சமற்று இருட்டாக இருக்கம். அருகில் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். அந்த இருட்டில் கடவுளின் உருவம் மங்கலாகத் தெரியும். சுவாமிக்குச் சூடம் ஏற்றிக் காட்டும் போது உருவம் சற்று பளிச் செனத் தெரியும். அந்தச் சமயம் பார்த்துக் கடவுளைப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொண்டு கன்னத்தில் போட்டுக் கொள்வான். எந்த நேரத்தில் கடவுளின் உருவத்தை நன்கு பார்த்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டுமோ அந்த நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டால் எப்படி? பெருமானுடைய உருவம் நம்முடைய மனதில் பதிய வேண்டும். அது தான் முக்கியமானது.

பாம்பன் சுவாமிகள் சொல்வார் ஒவ்வொரு தலத்திற்கு போவேன். அங்கே ஒவ்வொரு கடவுள் பிரதிமையிலும் முருகா! உன்னுடைய உருவத்தை நான் தரிசிக்கிறேன். அப்படி அநதப் பிரதிமையில் உன்னுடைய உருவம் படியாவிட்டால் அதில் என் உள்ளம் படியாது என்றார்.

திருவா ரெந்தத் தலமுற்றாலும் தெய்வம் தொழுதாலும்
பெருவாரி படிந்தாலும் தெய்வப் பெயர்கள் சொற்றாலும்
மருவா ரளிநக் கடம்பார் மார்பா மங்கா ஒளியாம் உன்
உருவா னதிலே படியா விடின் என் உள்ளம் படியாதே

பாம்பன் சுவாமிகள் மதுரை மீனாட்சியம்மனைப் பார்க்கப் போகிறார். அவர் ஏற்கெனவே முருகப் பெருமானின் உருவத்தை மனதில் பதியவைத்தக் கொண்டவர். அவர் மீனாட்சியம்மனைப் பார்க்கிறார் அங்கே அவருக்கு மீனாட்சியம்மன் தெரியவில்லையாம், முருகப்பெருமான் தான் தெரிந்தாராம். எங்கே எங்கே பார்க்கின்றேனோ அங்கேயங்கே தென்படும் உருவத்தையெல்லாம் முருகப் பெருமானே! உன்னுடைய உருவமாகப் பார்க்கிறேன் என்கிறார். மீனாட்சியம்மனைப் பார்த்து அன்னையே அருட் குகப்பிரமமே என்று

பாடுகிறார். மீனாட்சியம்மன் அவருக்குக் குகப்பிரமமாகத் தெரிகிறது. அப்படித் தெரியவில்லை என்றால் என்ன பண்ணுவாராம்? அந்த வழிபாடே வேண்டாம் என்று அந்தக் கோயிலை விட்டு வந்து விடுவாராம்.

......கடம்பார் மார்பா மங்கா ஒளியாம் உன்

உருவா னதிலே படியாவிடின் என் உள்ளம் படியாதே

அப்படியானால் எது முக்கியம்? நமக்கு உருவந்தான் முக்கியம். அதை வைத்துத் தான் தியானம் செய்ய வேண்டும். அதற்றகாகத் தான் நம்முடைய சமயத்தில் இவ்வளவு வகையான உருவங்களைப் படைத்தார்கள், வேண்டியதைத் தெர்ந்தெடுத்துக் கொள் என்று.

ஆண்டவன் மூன்று நிலையில் உள்ளான். அவை அருவம், உருவம், அருவுருவம், அருவுருவம் என்பது இலிங்க வடிவம் உருவம் என்பது நடராசரின் உருவம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இத்தனை உருவங்களை கடவுளுக்கு ஏற்றிப் படைத்துக் கொடுத்தார்களே, எதற்காக? அந்த உருவத்தை மனத்தில் பதித்துக் கொள்வதற்காகத் தான். மனம் எதையாவது பற்ற வேண்டுமானால் உருவம் அவசியம். உருவம் இல்லாவிடில் மனது பற்றாது. பழங்காலத்திலும் சரி, இன்றைக்கும் சரி, இன்றைக்கு என்ன தேதி? 4,9,99 ஆகிய இன்றைக்கு சரி இனிமேலும் சரி, மனிதன் என்று ஒருவன் இருப்பானேயானால் அவனுக்கு மனம் என்று ஒன்று உண்டானால் ஒவ்வொரு சொல்லையும் சொல்லும் போதும் அவனுக்கு அந்தச் சொல் குறித்த உருவம் முதலில் தோன்றிய பின்தான் அந்தச் சொல் விளங்கும். மாடு என்று சொன்னவுடனே உங்களுடைய மனதில் மாட்டின் உருவம் வந்து போகும். அதுபோல ஆண்டவன் என்றால் ஆண்டவனின் உருவம் வந்து போக வேண்டும். அதற்கு ஆண்டவன் ஓர் உருவத்தை எடுக்க வேண்டும். எந்த உருவத்தை எடுப்பான்? யார் யார் எந்தெந்த உருவத்தில் ஆண்டவனை நினைக்கிறார்களோ அந்தந்த உருவத்தை எடுப்பானாம்.

ஆருருவம் உள்குவார் உள்ளத்துள்ளே

அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்

என்று அப்பர் பாடி இதை உறுதி செய்கிறார்.

அருவமாய் இருக்கிற ஆண்டவன் நம்பொருட்டு அருவுருவும், உருவும் எடுக்கிறான். நம் பொருட்டு மூன்று நிலைகளிலும் வருகிறான். நாம் எந்த உருவத்தை நினைக்கிறோமோ அந்த உருவத்தில் வருவது அவனது வான்கருணையைக் காட்டுகிறது.

மொழி வரலாற்றைப் பார்த்தோமானால் முதலில் வந்த எழுத்து உருவ எழுத்து தான். உருவ எழுத்தே நாள் பட நாள்பட வட்ட எழுத்தாகி அதன்பின் இப்போது சதுர எழுத்தாக மாறியுள்ளது. காரணம் மனது பற்ற வேண்டுமானால் உருவம் வேண்டும். எனவே உருவம் இல்லாத ஆண்டவன் நம்முடைய வசதிக்காக நாம் நினைத்த உருவம் எடுப்பது அவனது வான்கருணை அல்லவா?

ஆனால் சில மதங்கள் ஆண்டவனுக்கு உருவம் கிடையாது என்கின்றன. அப்படிச் சொல்வதில் முத்னமையாக இருப்பது இஸலாமிய மதம். இது ஆண்டவனுக்கு உருவம் கிடையாது அருவாக மட்டுமே அவன் இருக்கிறான் என்று கூறுகிறது. கடவுளுக்கு உரவம் கூறும் நம்மை அவர்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.

நான் நால்வர் படம் போட்டு ஒரு லெட்டர் பேடு வைத்திருந்தேன். என் வீட்டில் ஒரு வேலைக்காக ஒரு இஸ்லாமியர் வந்தார். நான் சில பொருட்களை அந்த லெட்டர்பேடில் எழுதிக் கொடுத்து அதை வாங்கி வந்து வேலை செய்யும் படி அவரிடம் கொடுத்தேன். அந்த நால்வர் படம் இருக்கும் பகுதியைக் கிழித்துவிட்டு சீட்டை மடித்துவைத்துக் கொண்டார். ஏன் அதைக் கிழித்தீர் என்று கேட்டபோது நான் விக்கிரகத்தை எல்லாம் தொடமாட்டேன் என்றார். அவர் மீது கோபித்துக் கொள்ளவில்லை. அவர் ஏதோ ஒரு கொள்கை வைத்திருக்கிறார் அதன்படி அவர் நடந்து கொள்கிறார் என்று விட்டுவிட்டேன். அவர் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள் சார்! எங்கள் தூதுவர் சொன்னார் கடவுள் விக்கிரமாக இல்லை கடவுள் அருவம் தான். எனவே உருவங்களைத் தொடுவது எங்கள் கொள்கைக்கு எதிரானது என்றார்.

இதைப்பற்றி சிவஞான சித்தியார் ஒன்றை மிக அற்புதமாகக் கூறுகிறது. குறித்ததொன்று ஆகமாட்டாக் குறைவிலன் ஆதலானும் இது ஓர் அற்புதமான பார்வை.

இங்கே ஒன்றை நான் சொல்ல வேண்டும். மாக்ஸிம் கார்க்கி என்ற கம்யூனிச எழுத்தாளன் ரஷ்ய மொழியில் தாய் என்ற நூலை எழுதினான். அது உலகெங்கும் பரவிய நூல். பெரியோர்களே! உலகிலேயே மிக அதிகமான மொழிகளில் மொழி கெயர்க்கப்பட்ட நூல் பைபிள். அதற்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள். அதற்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்படக் கூடிய நூல் மாக்ஸிம் கார்க்கி எழுதிய தாய் என்ற இந்த நூல். அவ்வளவு புகழ் பெற்றது இந்த நூல்.

இந்த நூலில் கார்க்கி ஒரு கருத்தை எடுத்து வைக்கிறான். கம்யூனிச கொள்கையில் கடவுளுக்கு இடமில்லை என்பது நமக்கத் தெரியும். கடவுளைப் பற்றி எழுதிதிய கார்க்கி ஒரு எலி கடவுளை வரித்துக் கொள்ள வேண்டுமானால் அந்தக் கடவுள் எலியாகத் தான் இரக்கும் என்றதன். இத சரிதானே! அது தானே அதனுடைய சிந்தனைக்கு எட்டிய வடிவம்! ஒரு எலி கடவுளை மனித வடிவத்தில் வைத்த வணங்கப் போவதில்லை. காரணம் என்னவென்றால் அதனுடைய மனது அதனுடைய வடிவத்தைத் தான் ஏற்றுக் கொள்ளும். அது போல மனிதனுடைய மனம் எதை ஏற்றுக் கொள்கிறதோ அதைத் தான் கடவுளுக்கு ஏற்றி வழிபடும்.

இப்ப எலிக்கு அருள்புரிய வேண்டும் என்று சொன்னால் ஆண்டவன் என்ன செய்வான்? எலி நினைக்கும் எலி வடிவில் சென்று அதற்கு அருள்புரிய வேண்டும். இப்படித் தான் அருள்புரிந்தான் என்று திருவிளையாடற்புராணம் சொல்கிறது. அதில் நாரைக்கு முந்தி கொடுத்த படலம் என்று வரும். பன்றிக் குருளைகளுக்கு அருள்புரிந்த படலம் வரும். பன்றிக் குருளைகள் ஆண்டவனிடம் எந்த மொழியில் வேண்டி இருக்குடங? வடமொழியிலா? அவற்றிற்கு ஏது மொழி? அவற்றிக்கு என்ன தோன்றுகிறதோ அது தான் மொழி அது தான் கடவுள். மாக்சிம் கார்க்கி சொன்னது போல அது பன்றியாகவே கடவுளை நினைத்து வழிபட்டிருக்கலாம். அதனால் தான் ஆண்டவன் தாய்ப் பன்றியாகவே கடவுளை நினைத்து வழிபட்டிருக்கலாம். அதனால் தான் ஆண்டவன் தாய்ப் பன்றியாக வந்து பன்றிக்குருளைகளைக் காப்பாற்றி அருள்புரிந் தான் என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

எனவே எந்த உருவத்தினை உயிர்களின் மனம் ஏற்றுக் கொள்கிறதோ அந்த உருவத்தில அறைவன் வந்து அருள்புரிய வேண்டும். அப்படி வந்தால் தான் அவன் இறைவன். ஏனென்றால் இறைவனுக்கு நானும் ஒரு பிள்ளை (எதிரில் உள்ளவரைச் சுட்டிக்காட்டி) அவரும் ஒரு பிள்ளை ஒரு பசுவும் அவரக்குப் பிள்ளைதான். சர்வ ஜீவராசிகளுக்கும் அவன் தான் தந்தை. அவையவை எப்படியெப்படி ஆண்டவனை வணங்குகிறதோ அவற்றிற்கேற்ப ஆண்டவன் வந்தாக வேண்டும். இல்லாவிடில் அவன் ஆண்டவன் இல்லை.

ஆக, எந்த உருவத்தை நினைத்து உயிர் வணங்குகிறதோ அந்த உருவத்தை ஆண்டவன் எடுக்க முடியாவிட்டால்–அந்த சத்தி அவனுக்கு இல்லையெனில் அவன் சர்வ வல்லமை படைத்தவன் என்று கூறுவது தவாறகப் போய்விடும். எனவே,

குறித்ததொன்று ஆகமாட்டா குறைவிலன் ஆதலானும் என்று ஆண்டவனைக் குறித்துச் சித்தியார் அழகுபட உரைத்தது. யார் யார் எப்படி எப்படி குறிக்கிறார்களோ அப்படி ஆண்டவன் ஆகவேண்டும். ஆகவில்லை என்றால் அது அவனுக்கு ஒரு குறையாகி விடும். அந்தக் குறை அவனுக்குக் கிடையாது. அவனும் ஒரு உருவத்தில் வந்தாக வேண்டம். இதையெல்லாம் அந்த இஸ்லாமிய சகோதரனிடம் எடுத்துக் கூறியதும் அந்தச் சகோதரன், சார்! நீங்க சொல்றதும் சரியாத்தான் இருக்கு. ஆனா இதையெல்லாம் எங்க மௌல்வி கிட்ட கேட்டுகிட்டு எடுத்துக்கறேன் என்றார். சரி! அது அவருடைய நிலை! அதை விட்டு நம் பொருளைப் பார்ப்போம்.

தியானத்திற்கு நாம் குறிப்பிட்ட ஒரு உருவத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். உருவமின்றி தியானம் கைகூடாது. எந்த உருவத்தை எடுத்துக் கொள்வது? உருவத்தைத் தேர்ந்தெடுக்கும் போது அறிவார்ந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும். உமதணைத்திற்கு நடராசர் உரவத்தை எடுத்துக் கொள்வோம். இதுவும் இதுபோன்று நமது சைவ சித்தாந்த நெறியிலே போற்றப்படும் அத்தனைக் கடவுள் உருவங்களுக்கு அறிவார்ந்த பொருள் புதையல் போல உண்டு. எல்லாவற்றையும் இப்ப ஆராய முடியாது. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சட்டிக் காட்டுகிறேன். ஒரு சிலர் முருகனை வணங்குவர். ஒரு சிலர் முருகனது வேலை மட்டும் வணங்குவதும் உண்டு. சில கோவில்களில் வேல் மட்டும் இருக்கும். இதனை வேற்கோட்டம் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கதிர்காமத்தில் வேலை மட்டுமே வணங்குவர். வேல் மடடும் அங்குள்ள கோயில் கருவறையில் உள்ளது.

சிலர் கேட்கலாம் ஏன் இந்த வேலை வணங்க வேண்டும்? வேல் ஓர் ஆயுதம் தானே! இது குத்திக் கிழிக்கப் பயன்படுவது இதே போல குத்திக் கிழிக்கப் பயன்படும் கத்தி, பிளேடு, சத்திரி ஆகியவற்றை வணங்கலாமே! எல்லாமே ஆயுதம் தானே!

பெரியோர்களே! வேல் ஆயுதம் மட்டுமல்ல அறிவின் வடிவம். அறிவின் இலக்கணம் என்ன? அறிவு அகன்று, கூர்ந்து ஆழமாக இருத்தல் வேண்டும். ஆழ்ந்தகன்ற நுண்ணியனே என்பது திருவாசக வாக்கு. இறைவன் பேரறிவின் வடிவம் எனேவ அவ்வாறு மணிவாசகர் இறைவனை விளித்தார்.

எனவே அறிவென்றால் அது ஆழ்ந்து அகன்று கூர்ந்திருக்க வேண்டும். ஒருவன் நிறைய படித்திருப்பான் ஆனால் எடுத்துச் சொல்லத் தெரியாது. அவன் படிப்பு அகன்ற படிப்பாய்இருந்து என்ன பிரயோசனம்? அது அவனுக்குப் பயன் தரலாம் மற்றவாக்குனது அறிவு ஒரு பயனும் தராது. நிறையப் படிப்பது வேறு, அதன் ஆழம் காண்பது வேறு. படித்தவற்றின் சாரம் தெரியாவிட்டால் படித்ததனுடைய பயன் என்ன? அடுத்து ஒருவன் பலவற்றைப் படித்திருக்கலாம். அவற்றின் சாரத்தையும் கண்டிருக்கலாம். ஆனால் படித்த அத்தனையும் எந்த நேரத்திரல் எப்போது பயன்படுத்த வேண்டுமோ அப்போது பயன்படுத்த வேண்டும். அப்படிப் பயன்படுத்த இயலவில்லை என்றால் அவனது அறிவு பயன்பாட்டுக்கு உரிய கூர்மையற்று போய் மழுங்கி விட்டது என்று பொருள். எனவே அறிவில் கூர்மை வேண்டும்.

ஒரு உதாரணம் சொல்கிறேன். வாரியார் சுவாமிகள் ஒரு சொற்பொழிவினை முடித்த் பின்வாக்கம் போல் விபூதி வழங்கிக் கொண்டு இருந்தார். அன்பர்கள் ஒவ்வொருவராக வாங்கிச் சென்றனர். ஒரு வைணவ அன்பரும் அவரிடம் விபூதி வாங்கிக் கொண்டார். வாங்கிக் கொண்டு ஒரு சந்தேகம் கேட்டார். சாமி! பெருமாள் கோவிலில் சிவன் கிடையாது. ஆனால் சில சிவன் கோவில்களில் பெருமாள் இருக்கிறாரே, இது எதைக் குறிக்கிறது? அவர் சொன்னது போல காஞ்சியில் ஏகாம்பரேஸ்வரா் கோயி!லில் நிலாத்துண்ட பெருமாள் சந்நிதி உண்டு. இப்படி ஏன் பெருமாள் கோவிலில் சிவன் இருப்பதில்லை என்பது அவர் சந்தேகம். இந்தச் சந்தேகத்தைக் கேட்ட வைணவ அன்பருக்கு இது பெருமாளுடைய பரத்துவத்தைக் காட்டுவது என்ற எண்ணம். அதைப் புரிந்து கொண்ட வாரியார் சுவாமிகள் பட்டென்று உடனே சொன்னார். அது ஒன்றும் பெரிய விஷயமில்லையப்பா! கலெக்டர் வீட்டுல பியூன் இருப்பான். பியூன் வீட்டுல கலெக்டர் இருக்க மாட்டார். அவ்வளவு தான்.

உலகியலை எவ்வளவு கூர்ந்து கவனித்திருந்தால் இதை வாரியார் உடனே சொல்ல முடியும்? இது தான் அறிவுக் கூர்மை.

எனவே பெரியோர்களே! அறிவென்றால் அது கூர்ந்து அகன்று ஆழமாக இருக்க வேண்டும். வேலாயுதத்தைப் பார்த்தோமானால் நுனி பாகம் கூர்ந்து, இலைப்பாகம் அகன்று, தண்டுப்பாகம் ஆழ்ந்திருக்கிறது. எனவே அறிவே வேல் வேலே அறிவு. வேலுக்கு அபிடேகம் செய்தால் அறிவிற்கு அபிடேகம் செய்தது ஆகும். வேலுக்கு பூ போட்டால் அது அறிவுக்குப் பூ போட்டதாகும். தீபாரதனை காட்டினால் அறிவுக்குத் தீபாராதனை காட்டியது போலாகும். இதைப் புரிந்து கொண்டு வேலுக்கு வழிபாடு செய்தல் வேண்டும். வேலுக்கு மட்டுமல்ல எந்த உருவத்தை வழிபட்டாலும் அதன் அறிவார்ந்த பொருளை உணர்ந்து வழிபாடு செய்ய வேண்டும். இதைத்தான் சித்தியார் மிகத் தெளிவாகச் சொல்கிறது.

ஒழுக்கம் அன்பருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்

அறிவொடு அர்ச்சிக்க வேண்டும் என்கிறது சித்தியார். நீ எதை வேண்டுமானாலும் வணங்கு. ஆனால் அதன் பொருளை அறிந்த அறிவோடு அதனை அர்ச்சித்து வணங்கு என்று சித்தியார் இந்தப் பாடலில் கூறுகிறது. இப்படி வேறு எந்த வேதத்திலும், மதத்திலும் சொல்லவில்லை. எதைச் செய்தாலும் அதைப் புரிந்து கொண்டு செய் என்பது எவ்வளவு உயர்ந்து அறிவார்ந்த கொள்கை!

ஆகவே, வேலை வணங்கு முன் அது எதைக் குறடிக்கிறது என்று பிரிந்து கொண்டு வேலை வணங்குவதே வேலையாகக் கொள்ள வேண்டும். இப்படி எந்த உருவத்தை வணங்கினாலும் அல்லது தியானித்தாலும் அந்த உருவம் எதைக் குறிக்கிறது என்று அறிந்து கொண்டு வணங்க அல்லது தியானிக்க வேண்டும். இப்படித் தேர்ந்தெடுத்த உருவத்தை மெல்ல மெல்ல தியானத்திலே கொண்டு வர வேண்டும்.

நாம் அப்போது சொல்லிக் கொண்டிருப்பது யோகாந்தத்தைப் பற்றி ஆகும். யோகாந்தத்தில் தியானம் முக்கியமான படி. எனவே தான் இவ்வளவு விரிவாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஓர் அன்பர் நான் இங்கு நுழையும் போதே தியானம் செய்யும் முறையைக் கூறுங்கள் என்று கேட்டார். அவருக்கு அவர் மூலமாக எல்லாருக்கும் பயனாகும்படி இதைச் சொல்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஒரு வெள்ளைத் தாளில் ஒரு புள்ளி வையுங்கள். உடன் கதவைச் சாத்தி விட வேண்டும். இது மனதை ஒரு முகப்படுத்தத் தானே தவிர, இது ஒன்றும் மாந்த்ரீகமல்ல. கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தால் மனைவி மத்தியானம் சாப்பாட்டிற்கு என்ன மெனு என்று கேட்பாள். டெலிபோன் மணி அடிக்கப் பையன் ஓடிவந்து கூப்பிடுவான். இப்படி பலப்பல விதமாக தொந்தரவுகள். எனஅவ கதவைச் சாத்தித் தனித்திருக்க வேண்டும். 5 நிமிடம் அந்த வெள்ளைத் தாளில் உள்ள புள்ளியையே பார்க்க வேண்டும். பெண்களுக்கு ஒரு நேரம் வசதியாக இருக்கும். இப்படி நேரத்தை நாம் முதலில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். முதல் நாள் இரவு 11 மணி என்றால் மறுநாள் அதே இரவு 11 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

நாம் எதைச் செய்தாலும் கால தத்துவ அடிப்படையில் தான் செய்கிறோம். நமது உடல் தத்துவம் முப்பத்தாறில் கால தத்துவம் ஒன்று. எனவே நீங்கள் ஆரம்பிக்க வில்லையானால் உடல் தானாக ஆரம்பிக்கும். இரவில் படுக்கிறோம் காலையில் சீக்கிரம் எழுந்து கொள்ள வேண்டும். காலையில் 4 மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்று மனதில் நினைத்தக் கொண்டு படுத்தால் தானாக காலை 4

மணிக்கு விழிப்பு வந்து விடும். இந்த அனுபவதட பெரியவர்களுக்குத் தெரியும். அந்தக் கால தத்துவம் நம்மை நாம் நினைத்த நேரத்திற்கு எழுப்பி விட்டு விடும்.

ஆகவே குறிப்பிட்ட நேரத்தில் தினமும் 5 நிமிடம் என்று இந்தப் பயிற்சியை மேற்கொள்ளுங்கள். முதல் நாள் 5 நிமிடம் என்றால் அடுத்த நாள் 10 நிமிடம் அதற்கடுத்த நாள் 15 நிமிடம் என்று இப்படியே பயிற்சி நேரத்தைக் கூட்டிக் கொண்டே வாருங்கள். இப்படியே சுமார் அரை நேரம் பயிற்!ச என்ற வரையறைக்கு வாருங்கள். இப்போது வெள்ளைத் தாளை எடுத்துவிட்டாலும் அந்தப் புள்ளி தெரிய வேண்டும். அவ்வாறு தெரியாவிட்டால் இன்னும் பக்குவப்படவில்லை என்று பொருள். அப்போது பயிற்சி நேரத்தை இன்னும் கூட்டிக் கொள்ள வேண்டும். சிலருக்கு 5 நிமிடத்திலேயே அந்தப் பக்குவம் வந்துவிடும். சிலருக்கு மூன்று மணி நேரம் கூட தேவைப்படலாம். இது அவரவர் பக்குவம். பயிற்சி முடிவில் வெள்ளைத்தாள் இல்லாமலே புள்ளி நமக்கு எங்கு பார்த்தாலும் தெரியும். இப்போது புள்ளி நம்மைச் சார்ந்து விட்டது. அல்லது நாம் புள்ளியைச் சார்ந்து விட்டோம்.

பெரியோர்களே! நம்முடைய மனம் சார்ந்ததன் தன்மையுடையதாக மாறும் தன்மையுடையது. இதனை சைவ சித்தாந்தத்தில் சார்ந்ததன் வண்ணமாதல் என்பர். திருவள்ளுவர் இந்தத் தன்மையை உணர்ந்து நமக்கு வழிகாட்டி ஒரு குறளைக் கூறுகிறார். அதாவது,

சார் புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றைச்

சார்தரா சார்தரு நோய்

சார்ந்ததன் வண்ணமாக மாறுபவர்களாகிய நாம் முதலில் எது நமக்கு உரிய சார்பு என்று உணர்ந்து அதை தேர்ந்தெடுக்க வேண்டும். முன்னால் புள்ளிப் பயிற்சி ஒரு உதாரணத்திற்குச் சொல்லப்பட்டதே ஒழிய அந்தப் புள்ளியைச் சார்வதால் நமக்கு என்ன பயன்? எனவே இப்பயிற்சியல் சாரும் பொருளை நமக்கேற்றவாறு தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த அறிவார்ந்த அடிப்படையில் தான் நம் கடவுளின் உருவங்கள் அமைக்கப்பட்டன.

முருகப் பெருமானுக்கு ஆறுதலை என்றால் அது ஓர் அறிவார்ந்த அடிப்டையில் அமைக்கப்பட்டது. நடராசருக்க நான்கு கரங்களைக் காட்டினார்கள் என்றால் அதற்க ஓர் அறிவார்ந்த அடிப்படை உண்டு. அதை உணர்ந்து அந்தந்த உருவத்தைத் தியானம் பயிற்சி செய்தோ மானால் அந்த உருவம் மனதில் பரிணமிக்கும். இப்படி முருகனைத் தியானம் செய்து முருகப் பெருமானாகவே மாறி நிற்கும் முருகனடியார்கள் எத்தனையோ பேர் உண்டு.

இதில் இன்னொன்றையும் தெளிவு செய்கிறார் பாம்பன் சுவாமிகள். அதாவது முருக வழிபாட்டை மேற்கொள்ள எண்ணித் தொடங்கினால் அங்கே முருகனது உருவம் ஒன்றாயில்லை. பல உள்ளன. முருகன் ஆறுமுகத்தில் இருக்கிறார் ஒரு முகம் காட்டித் தனியாக இருக்கிறார் ஒரு முகமோடு இரு மனைவியருடன் இருக்கிறார் ஒரு முகமாகக் குழந்தையாகத் தவழ்கிறார். முருக உருவங்களிலே கூட எத்தனை பேதங்கள்! இதில் ஏதாவது ஓர் உருவத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த உருவம் ஒன்று தான் உங்கள் மனதில் படிய வேண்டும். பாம்பன் சுவாமி சொன்ன மாதிரி எந்தச் சாமியைப் பார்த்தாலும் அந்த உருவம் தான் அதில் தெரிய வேண்டும். தெரியலேன்னா மீண்டும் பயிற்சி பண்ண வேண்டும்.

அப்படி தினந்தோறும் பயிற்சியில் பழகப்பழக எல்லா இடத்திலேயும் அந்த உருவம் தெரிய வேண்டும். எனடகது பார்க்குமிடமெல்லாம் என் உள்ளர்ந்த முருகப்பெருமானின் உருவம் தெரிகிறது. இது பயிற்சியால் தானாக வரும். இது ஏதோ, சத்தியவேல் முருகனின் தனிப்பட்ட சொத்தல்ல யாருடைய சொத்துமல்ல. நம் மூதாதையாக்ள் நமக்கு வைச்சிட்டுப் போன பொதச் சொத்து. இதை யாரும் பயன்படுத்தலாம். அவரவர் பயிற்சிக்கேற்ப எல்லா இடத்திலேயும் நடராசர் தெரியலாம் எல்லா இடத்திலேயும் தேவியின் உருவம்

தெரியலாம். அப்படித் தெரியுமானால் அந்த உருவமாக நமக்கு ஆண்டவன் அருள் புரிவான். கண்ணை மூடினாலும் அந்த உருவம் நம் மனக்கண்ணில் தெரிய வேண்டும். தெரிந்தால் அதை அங்கேயே அப்படியே நிறுத்துங்கள். அங்கேயே அதற்கு மனத்தினாலே பூசை செய்யுங்கள். இதைத்தான் சிவஞான பாடியம் அகப்பூசை என்கிறது.

மனதிலே நிறுத்தப்பட்ட அநத்உருவத்திற்க மனத்தினாலே தண்ணீர் ஊற்றுங்கள் மனத்தினாலே பட்டு சாத்துங்கள் மனத்தினாலே தீபாராதனை செய்யுங்கள். இப்படி மனத்தினாலே எல்லாக் கிரியைகளையும் ஆற்றுங்கள். இதுவே அகப்பூசை. நான் உங்களை மேலே கொண்டு செல்வது. புறப்பூசை அதற்கு அனுசரணையாக இருக்கும். சிவபூசை செய்பவர்கட்கெல்லாம் அவர்களது தீடசா குரு அகப்பூசையை முதலில் செய்ய வேண்டும் என்றே சொல்லிக் கொடுத்திருப்பார்கள்.

மெல்ல மெல்ல அகப்பூசையை உள்ளமாகிய தாமரையில் வைத்துச் செய்யப் பழக வேண்டும். அதற்குரிய பாடல்கள் இருக்கின்றன. சிவஞான போதத்தில் மெய்கண்டார் ஓர் அற்புதமான அகப்பூசைப் பாடலைப் பாடியிருக்கிறார்.

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை

அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில்—அஞ்செழுத்தால்

குண்டலியிற் செய்தோமம் கோதண்டம் சானிக்கில்

அண்டனாம் சேடனாம் அங்கு.

இந்தப் பாடலைச் சொல்லி இதயத்தைத் தாமரையாக முறையாகக் கண்டு, அந்த தாமரைப் பொருட்டின் மையத்திலே முருகப்பெருமானையோ, சிவபெருமானையோ, கணபதியையோ, தேவியையோ எது அவரவர்க்கு உபாசானா மூர்த்தியோ அதனை இருக்கையிட்டு அமாத்தி அபிடேகம் பண்ணி—எத்தனை விதமான அபடேகம் உண்டோ அத்தனையும் மனத்தால் பண்ணி—அகப்பூசை செய்தல் வேண்டும். உள்ளே பூசையை எத்தால் இயற்றுவது எனின் மனத்ததால் என்க என்பது சிவஞான முனிவர் வாக்கு. மனத்தினாலே செய்ய செய்ய உருவத்தில் மனம் ஒன்றும். ஒன்றிய பின் தான் யார் அது எது என்பது பற்றிய காட்சி கிடைக்கும். பின்னர் உருவமும் மறைந்து அருவமாக உணர்வு ஒன்றே மேலோங்கி நிற்கும். இது தான் உருவம், காட்சி, கத்தி என்று தசாரியத்தில் கூறப்பட்டது. இதன் முடிவில் ஒளி தோன்றும். அந்த ஒளியை வழிபட வேண்டும்.

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மனதில் உருவத்தைப் பற்றிய பினதான் அருவத்தைப் பற்ற முடியும். முதலில் வீடு கட்ட வேண்டுமானால் சாரங்கள் அவசியம். கிரகப் பிரவேசம் செய்யும் போது சாரத்தை எடுத்து விட வேண்டும். ஆகா! இந்த சாரம் தானே வீடு கட்ட உதவியது என்று சாரத்தை எடுக்காமல் யாராவது கிரகப் பிரவேசம் செய்வானா? அதைப் போல்இந்த உருவ பூசையெல்லாம் சாரம் போல. மெல்ல மெல்ல உருவ வழிபாடு என்ற சாரத்தால் உள் ஒளியை நாட்டிய பின்னால் உருவ வழிபாட்டின் தேவை இருக்காது. ஒளியையே வழிபட வேண்டும்.

இந்த ஒளி வழிபாட்டிற்கு முன் முதலில் ஒலி கேட்கும். உலகியலில் கூட ஒளியும் ஒலியும் இணைந்தே வரும். மின்னல் ஒளி வரும் அப்புறம் அதனுடன் இணைந்து இடி முழக்கம் கேட்கும். ஆனால் அருளியலில் அதற்கு நேரெதிராக நடக்கும். முதலில் ஒலி கேட்கும் அப்புறம் ஒளி தெரியும். கேட்கப்படும் ஒலிகள் ஒன்றிரண்டல்ல பத்து ஒலிகள் கேட்கும்.

மணிகடல் யானை வளர்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே.

இது திருமந்திரப் பாடல் எண் **606.** எனக்குத் தெரிந்ததை எல்லாம் ஒப்புவித்துக் கொண்டே போகக் கூடாது. உங்களுக்கும் தெரிய வேண்டும். அதனால் அந்தந்தப் பாடல் எண்களையும் உடன் சொலிலக் கொண்டு வருகிறேன்.

உள்ளொலி கேட்கும் போது மணியோசை போல கேட்கும் அலைகடல் ஓசை போல் கேட்கும் பெண்கள் வளையோசை போல் கேட்கும் தும்பி ரீங்காரம் செய்வது போல கேட்கும் மேகம் இடிப்பது போல கேட்கும் பேரிகை தட்டுசது போல கேட்கும் குழல் ஊதுவது போல் கேட்கும் யாழ் வாசிப்பது போல கேட்கும் வண்டு ரீங்காரம் செய்வது போல கேட்கும் யானை பிளிறுவது போல கேட்கும்.

இதுவே தசநாதம் என்று கூறப்படுகிறது இந்த அனுபவத்திற்குப் பெயர் நாத சம்மியம். இதைத்தான் சிலம்போசை கேட்டார் சேரமாபன் பெருமாள் நாயனார் என்று கூறினார். யோக அனுபவத்திலே ஒலி அனுபவம் கட்டாயம் உண்டு. அது தான் அதற்கு அடிப்படை.

இந்த ஒலி அனுபவத்தைத் தான் கண்ணப்பர் காளத்தி காட்டில் கேட்டார். ஏதோ ஓர் ஒலி கேட்கிறதே! இந்த மாதிரி ஒலியை நான் கேட்டதே இல்லையே! உனக்குக் கேட்கிறதா என்று தன்னோடு கூட வந்த வேடன் நாணனைக் கேட்டார். அவனுக்கு ஏது அந்த அனுபவம்? ஏதோ வண்டு கத்தி இருக்கும் என்கிறான் அவன். வண்டு ரீங்காரம் செய்திருக்கும் என்று கூடசொல்லத் தெரியவில்லை. வண்டு கத்தி இருக்குமாம்! கத்துவது கழுதை!

கண்ணப்பன் கேட்டது உள்ளொலி நாணன் கேட்டது வெளியொலி. என் மனத்திற்குள்ளேயே அந்த ஒலி கேட்கும். பூசை செய்து கொண்டிருப்பேன் அது கேட்கும். அலுவலகத்திலே வேலை செய்து கொண்டிருப்பேன். அது கேட்கும். நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். அது பாட்டுக்கு கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி சார் வேலை செய்வது? என்று இன்றைக்கு வாக்மென் என்ற ஒரு கருவி இருக்கிறது. தொடர் வண்டியில் போய்க் கொண்டிருப்பான். பலர் பேசிக் கொண்டிருப்பார்கள். இவன் வாக்மென் காதில் வைத்துக் கொண்டிருப்பான். அவன் காதுக்கள் மட்டும் தனியே பாடல்கள் கேட்டக் கொண்டிருக்கும். அது வெளியில் இருப்பவர்கட்குக் கேட்காது. உள்ளுக்குள்ளே பாடலையும் கேட்டுக் கொண்டு வெளியில் இருப்பவர்களோடும் வேண்டும் போது இடையிடையே இவன் பேசுவான்.

தசநாதம் உள்ளுக்குள்ளே கேட்கும் அனுபவமும் இதே போல் தான். இதையே தணிந்தெழுநாதங்கள் தாமிவை பத்தும் என்று திருமூலர் அற்புதமாக படம் பிடித்துக் காட்டினார்.

இந்த ஒலி அனுபவம் இல்லாத ஒளி அனுபவம் கிடையாது. இதையே பணிந்தவர்க்கல்லது பார்க்கவொண்ணாதே என்று அறுதி இட்டுக் கூறினார் திருமூலர்.

ஒரு அன்பர் கேட்டாரல்லவா? தியான முறைகளை எப்படி மேற்கொள்வது? என்று அவருகங்கதவும், உங்களுக்காகவும் இதை இவ்வளவு விரிவாகச் சொல்லி வருகிறேன். எல்லாவற்றையும் மூடி மறைத்துக் கொண்டே இருந்தால் எப்படி? வெளிப்படையாக ஆக்கணும். இதுதானே எங்களைப் போன்றவர்களின் வேலை.

முதலில் உருவம் உருவம் தேய்ந்து அருவமாகும் ஒலி கேட்கும் அப்புறம் ஒளி அனுபவத்தில் மேலேற வேண்டும். இது தான் யோக சாதனையின் பலன். ஒலி அனுபவத்திற்குப் பின் முதலில் நீல ஒளி தோன்றும். இது அம்பிகையின் குறிக்கும். அதனால் தான் அம்பிகைக்கு நீலி என்று பெயர். நீலி என்றால் எதையும் சொல்வதற்கு முன்னாலே அழுகிறாளே அவள் என்று அர்த்தம் பண்ணக் கூடாது. பெரிய யோக அடிப்படையை வைத்து நீல ஒளியைக் குறிக்கும் அம்பிகையை நீலி என்று கூறினார்கள். இந்த நீல ஒளியில் பழகப் பழக நீல ஒளி மஞ்சள் ஒளியாக மாறும் மஞ்சள் ஒலி சிவ்பபொளியாக மாறும் சிவப்பொளி வெள்ளொளியாக மாறும். இந்த வெள்ளொளிக்கு மேல் வேறு ஒளி சொல்லப்படவில்லை. உரிய நூல்களில் இதுவரை தான் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் அவரவர் அனுபவத்தில் அறிய வேண்டும்.

அவ்வா றறிவார் அறிகின் றதலால்

எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே

என்று அருணகிரியார் இதனை அற்புதமாகப் பாடியருளினார்.

இதுவரை யோக நிலைபற்றி ஒரளவிற்கு விரிவாகப் பார்த்தோம். இதுவே யோகாந்தம் என்பது. ஒருவன் யோக நிலையிலே ஈடுபடுகிறான் அதிலே சமாதி நிலை வரும். அந்த நிலையில் ஓர் இன்பம் இருக்கும். எந்த நிலையில் இந்த சமாதி கூடினாலும் அந்தந்த நிலைக்கு உரிய ஓர் இன்பம் கிடைக்கும். அந்த இன்பத்தில் தோய்வான். தோய்ந்த அங்கேயே தங்கிவிடக்கூடாது. அதிலிருந்து அடுத்த நிலைக்கு ஏறிச் செல்ல வேண்டும். இப்படி ஏறிச் செல்லும் மார்ககத்தையே சன்மார்க்கம் என்றனர். சன்மார்க்கம் என்றால் நன்னெறி. இது தான் தாச, புத்திர, சக மார்க்கத்தின் மணி முடியானது என்று முன்னாலே விளக்கமாகப் பார்த்தோம்.

யோக அனுபவத்திலே ஒளி கிடைக்கும் என்றோம். அது தான் நெற்றிக்கண் பார்வை. இந்தப் பார்வையில் நமது உடம்பின் கூட்டுத் தத்துவங்களான முப்பத்தாறு தத்துவங்களில் ஒவ்வொரு தத்துவமாகப் பார்க்க வேண்டும். அதில் தோய வேண்டும் இன்பம் கிடைக்கும் பிறகு மேலேறி அடுத்த தத்துவத்திற்குப் போக வேண்டும். இப்படி தத்துவங்கள் முப்பத்தாறையும் தாண்டுபவர்களும் உண்டு. ஏதாவது ஒரு தத்துவத்திலே முடங்கி விடுபவர்களும் உண்டு. மேலே சிந்தனையைச் செலுத்தாமல் யார் யார் எந்தெந்த தத்துவத்தை வழிபடுகிறார்களோ அந்தந்த தத்துவ இடத்தை அடைந்து அங்கேயே இன்புற்று அதுவே மத்தி என்று இருப்பார்கள் என்று இதை ஆன்றோர்கள் விளக்கினர். இதில் சாக்கிய ஆன்றோர்களுக்கு அதாவது புத்த மதத்தினர்க்கு தங்க ஓர் இடமே இல்லாமல் போய் விடுகிறது. காரணம், புத்தமதத்தினர் எல்லாம் சூன்யம் என்பர். அவர்கள் எந்த தத்துவத்தையும் ஒப்புக் கொள்வதில்லை. எனவே தங்கி இன்புற ஓர் இடமில்லாதவர்கள் ஆனார்கள். இதையே சம்பந்தர் தஞ்சமிலாச் சாக்கியர் என்று பாடினார்.

எனவே ஏதாவது ஒரு தத்துவத்தைக் கொள்ள வேண்டும். கொண்டால் அந்த தத்துவ இன்ப உறையுள் கிடைக்கும். அதிலேயே மூழ்கி விடாமல் மேலேறும் திருவருள் இருக்குமானால் மேலேறுதல் வேண்டும். இப்படி ஒவ்வொரு தத்துவத்திலேயும் ஏறுகிறோமல்லவா? அங்கே ஒவ்வொரு தத்துவத்திலேயும் காட்சி கிடைக்குமல்லவா? அக்காட்சியில் அந்தந்த தத்துவங்களில் ஏற்கெனவே தங்கியிருக்கின்ற ஆன்றோர்களைச் சந்திக்கலாம்.

அவ்வாறு சந்திக்கும் போது இது தான் கடைசியா அல்லது இதற்கு மேலும் உள்ளதா என்று அவர்களைப் பார்த்துக் கேட்கத் தொன்றும். நாம் ஓர் ஊருக்குப் போகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அங்கே சிலரைப் பார்ப்போம். அவர்களைப் பார்த்து இந்த வழியே மேலே போகலாமா என்று அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவோம் அல்லவா? அது போல யோக நெறிக்கு உரியவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்கிறார்.

கரையும் கடலும் மலையும்

காலையும் மாலையும் எல்லாம்

உரையில் வருவான் ஒருவன்...

அரையன் இருப்பது ஆரூர் அவன்

எம்மையும் ஆள்வரோ கேளீர்

என்று பாடினார். இதையே மணிவாசகரும்,

கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்!

ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? யார் உற்றார்? யார் அயலார்?

ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

என்று, என்னைவிட முன்னால் சென்று அங்கங்கே பிணைக்கப்பட்டிருக்கிற பெரியோர்களே! கூறுங்கள்! என்று வழி விசாரித்துச் செல்வதாகப் பாடினார். இந்த அனுபவம் எல்லார்க்கும் பொது. யார் இதில் ஈடுபட்டாலும் இப்படித் தான் கேட்பார்கள். இப்படிக் கேட்டுக் கேட்டுத் தான் மேலே போக வேண்டும்.

இவ்வாறு மேலே செல்லும் போது கடவுள் வழி கொடுத்தால் மேலே போகலாம். இல்லாவிடில் அந்தந்த தத்துவத்தில் தங்க வேண்டியது தான்! மரம் வைத்தவன் தண்ணி ஊற்றுவான் என்பது போல அவனுக்குத் தெரியும், நம்மை எந்தப் பிறவியில் எந்த தத்துவத்தில் நிறுத்தி வைப்பது என்பது. இந்த நிலை இந்த ஆன்மாவிற்கு இப்போதைக்கு போதுமா அல்லது மேலேற்றும் அளவிற்கு பக்குவம் பெற்றிருக்கிறதா என்பதை அவன் நிர்ணயம் செய்கிறான். நம்முடைய பக்குவம் அவனுக்குத் தானே தெரியும்! இவன் தேறுவானா தேறமாட்டானா என்பதை அவன் அறிந்த ஒவ்வொரு அந்தமாக அவன் ஏற்றினால் தான் ஆறந்தத்தையும் நாம் காணமுடியும். இன்று கூட இங்கிருப்பவர்கள் அனைவர்க்கும் பக்குவம் உண்டா என்ற அவன் நமது பக்குவத்தை அளந்து அனுமதித்தால் தான் நாம் ஆறந்தத்தையும் காணமுடியும்!

சரி! நமது ஆறந்தப் பயணத்திற்கு வருவோம். முதலில் யோகாந்த அடிப்படையிலே ஒவ்வொரு தத்துவமாக ஏறி வருகிறோம். 24 தத்துவங்களைத் தாண்டிவிட்டோம் அதாவது ஆன்ம தத்துவத் தொகுப்பைத் தாண்டிவிட்டோம் அதற்கப்புறம் குண தத்துவம் வரும் அதன் பின் சில தத்துவங்களைக் கடந்து கலை என்ற தத்துவத்தை அடைகிறோம்.

அந்தக் கலை என்பது என்ன என்று புவனகலை ஞானதீபம் என்ற நூல் கூறுகிறது. கலை என்பத இரண்டு பகுதியாக ஒளிர்வது. ஒரு பகுதி மங்கல் ஒளியாக இருக்கும் இன்னொரு பகுதி கதிரவனைப் போலத் தெளிவான ஒளியாக இருக்கும்.

மங்கல் ஒளி என்பது கலைஞானம் உலகம் இப்படி இப்படி இருக்கிறது என்று நமக்குத் தெரிவிப்பது. பௌதிகம், ரசாயனம், கணிப்பொறியியல் என்று இப்படிப் பல துறை உண்டு. தொல்காப்பியம் கூறுவது போல எழுத்து, சொல், பொருள், உச்சரிப்பியல் என்றெல்லாம் உள்ள துறைகளும் இதில் சேர்ந்தவையே. இதையெல்லாம் நாம் அறிவதற்கம் ஓர் ஒளி வேண்டும். அந்த ஒளியே அறிவொளி எனப்படும். இதை மங்கல ஒளிப்பகுதியான கலைப் பகுதியால் விளக்கம் பெறுவது. எனவே இதைக் கலைஞானம் என்றனர். இந்த ஒளியை மங்கல் ஒளி என்று சொன்னதற்குக் காரணம் என்னவென்றால் இவை நம்முடைய ஐம்புலன்களாலே அதாவது ஐயறிவாலே உணர்கின்ற உணர்வு எனவே இதைஐயுணர்வு எனப்பட்டது. ஐம்புலக் கருவிகளால் அன்றி அருளே கருவியாகக் காண்பது மெய்யுணர்வு எனப்படும். கலையின்

மெய்யுணர்வி பக்கம் விளங்குமானால் வெட்ட வெளிச்சமாக எல்லாம் தெரியும். திருவள்ளுவர் மெய்யுணர்வு என்றே ஓர் அதிகாரம் வைத்தார்.

மெய்யுணர்வு தோன்றும் இந்த நிலையிலே கலாந்தம் என்பது. ஆறந்தம் என்ற தலைப்பிலே திருமூலர் இதனை அற்புதமாகப் பாடியருளியிருக்கின்றார்.

கொள்கயையிலான கலாந்தங் குறிக் கொள்ளில்
வில்கையி லான நிவிர்த்தாதி மோதாதிக்(கு)
உள்ளன வாம் விந்து உள்ளே ஒடங்கலும்
தெள்ளி யதனைத் தெளிதலும் ஆமே.

இந்தப் பாடல் எண்ணிக்கை 2377. இதில் கலாந்தம் என்றால் என் எண்ன என்று சொல்கிறார். கலை என்பது சைவ சித்தர்நதத்தில் வித்யா தத்துவங்களில் ஒன்று. இது கலை ஞானத்தைத் தருவதால் பாடலில் இதை மேதாவி என்று சொன்னார். கலாந்தத்தில் ஓர் அனுபவம் வரும். அதை அவரே எடுத்துச் சொல்கிறார். அதாவது கலாந்தம் என்னும் அனுபவம் வந்தவுடனே பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங் களாக மாறிவிடும். பசுகரணமாக இருக்கும் நேரம் தெளிவாக தெரியாத நேரம். பதிகரணமாக இருக்கும் நேரம் ஒளி தெரியும் நேரம்.

தேசார் சிவமாகும் தன்ஞானத்தின்கலை
ஆசார நேயம் மறையும் கலாந்தத்துப்
பேசா உரைஉணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாநந்தி தானே.

இந்தப் பாடலின் எண்ணிக்கை 2380. தேசு என்றால் ஒளிப்பிரபை தேஜஸ் என்று வடமொழியில் சொல்வார்களே அதைப் தமிழ்ப படுத்தும் போது தேசு என்பர். தேசு என்பது ஒளியல்ல ஒளிப்பிரபை. ஒளியுள்ள அருளாளர் உடம்பை புகைப்படம் எடுக்க முடியாது. குழல் விளக்கைப் புகைப்படம் எடுக்க முடியாது அதை நேர் நோக்கி எடுத்தால் ஒரே ஒளிச்சிதறலாய் தான் தெரியும். அது போல ஒளியுடம்பு பெற்ற அருளாளர்களைப் புகைப்படம் எடுக்க முடியாது. இந்த தேகத்தை சொர்ணதேகம் என்பர் பொன்னுடம்பு என்றும் கூறலாம்.

பசுகரங்கள் பதிகரணங்களாகி விட்டதால் இந்த நிலையில் அவன் அதிகமாகப் பேசமாட்டான். சிந்தனை மட்டுமே சென்று கொண்டிருக்கும். வேறு எதுவும் தெரியாது. இது கலாந்தத்தின் அனுபவ நிலை.

கலாந்தத்தின் அனுபவம் மேல் வரும் அனுபவங்களுக்கு எல்லாம் கதவைத் திறந்து விடும். ஏனென்றால் அங்கே தானே கருவிகளே அருளாக மாறுகின்றன. எனவே ஆதிக் கலாந்தம் என்ற பாடினார் திருமூலர்.

கலாந்தத்தின் அனுபவத்திலேயே திளைத்து நின்ற விடாமல் இன்னும் மேலேறினால் சிவ தத்துவங்க்ள ஐந்தையும் காணலாம். சிவ தத்துவ வகையிலே சுத்த வித்தைத் தத்துவத்தைத் தாண்டினால் ஈசுர தத்துவம். அதைத் தாண்டினால்சதாசிசவ தத்துவம். அதைத் தாண்டினால்சத்தி தத்துவம். அதைத் தாண்டினால் சிவ தத்துவம் அல்லது நாத தத்துவம்.

இந்த நாதமும் நான்கு வகைப்படும். அவை 1) வைகரி 2) மத்திமை 3)பைசந்தி 4) சூக்குமை. இந்த சூக்குமை பரநாதம் எனப்படும். இதற்கு மேல் தத்துவங்கள் இல்லை. இந்த இடத்திற்குப் போய் விட்டால் ஒலி ஒளியாகத் தெரியமாம்.

சூக்கும வாக்கதுள்ளோர் சோதியாய் அழிவதன்றி

ஆக்கிடும் அதிகாரத்திற் கழிவினைத் தன்னைக் கண்டால்

நீக்கமில் அறிவானந்த முதன்மை நித்தியம் உடைத்தாய்

போக்கொடு வரவிளைப்பும் புருடனுக்கு விகாரம் இன்றாம்.

வாக்கில் சூக்கும வாக்கைத் தரிசித்து விட்டால் ஒலி ஒளியாகக் காட்சி கொடுப்பது தெரியும். ஒலியே ஒளியாவது எப்படி? நாம் எல்பிஜி வாயு சிலிண்டர் வைத்திருக்கிறோம். வெளியே வாயு எனக்காணும் அதுவே சிலிண்டருக்குள்ளே திரவமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அழுத்தத்திலே வாயு திரவமாகிறது அல்லது திரவம் வாயுவாக மாறுவதைப் பார்க்கிறோம். எனவே ஒரு குறிப்பிட்ட அருளழுத்தத்திலே ஒலியே ஒளியாகத் தெரிகிறது. இந்த இடத்திற்கு வந்து விட்டோமானால் நாம் நாதாந்த்தை அடைந்தவர்கள் ஆகிறோம். அப்போது நம் உயிர் அப்படியே ஓம் என்கிற பிரணவ மயமாகி விடும். அதை ஓம் மயமாதல்என்பார் திருமூலர் இதையே பிரணவ தேகம் பெறுதல் என்பர். இதைக் குறித்த திருமந்திரப் பாடலைக் கூறுகிறேன்.

ஆம் அவரில் சிவனார் அருள் பெற்றுளோர்

போமலந் தன்னால் புகழ்விந்து நாதம்விட்(டு)

ஓமய மாகி ஒடுங்கலின் நின்மலந்

தோமறும் சுத்தா வவத்தைத் தொழிலே.

இந்தப் பாடலின் எண்ணிக்கை 2233. இந்த பாட்டு ஆறந்தம் என்ற தலைப்பிலே வரவேண்டியது. தவறிப்போய் கேவல சகல சுத்தம் என்ற தலைப்பில் வந்திருக்கிறது. பதிப்பிலே பார்த்தால் பல வேறுபாடுகள் பல குளறுபடிகள். போதாந்தம என்பது ஆறந்த தலைப்பிலேயே விளக்கப்பட்டிருக்காது. வேதாந்ததிலே வர வேண்டியது சிறப்புப் பாயிரத்திலே வரும் அல்லது வேதச் சிற்பில் வரும். பதிப்பித்தவர்கள் இதில் எது முறைமை என்று தெரியாமல் வைத்துப் பதிப்பித்திருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் குருமுகமாக திருமந்திரத்தை ஓதி அறியாமல் பதிப்பித்தததது தான். ஏதோ ஓலையில் இருந்தது என்று எடுத்து வைத்து அதை அப்படியே பதிப்பித்து விட்டார்கள். நல்லறிஞர்கள் எல்லாம் திருவருள் துணையோடு கூடி ஒரு செம்பதிப்பு செய்ய வேண்டும்.

திருப்பனந்தாள் பதிப்பிலே ஒரு மாதிரி ப. ராமநாதம் பிள்ளை பதிப்பிலே (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்) ஒரு மாதிரி திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பில் ஒரு மாதிரி. இப்படி அவரவர்க்குத் தோன்றியபடி மாற்றி மாற்றிப் பதிப்பித்திருக்கிறார்கள். இது தான் நம் தவக்குறை. தமிழர்கள் மூலநூலை உள்ளது உள்ளவாறே போற்றிக் காப்பதிலிருந்து தவறிவிட்டார்கள். பதிப்பு வித்தியாசத்தை மூலநூல் கொண்டு திருத்தலாம். மூல நூலையே தவற விட்டோமானால்? ஒரு சின்ன உதாரணம் கூறுகிறேன்.

அத்தன் நவதீர்த்தம ஆடும் பரிசு கேள்

ஒத்த எமய்ஞ் ஞானத்து உயர்ந்தார் பதத்தைச்

சுத்தம தாக விள்கிகத் தெளிக்கவே

முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே.

இந்தப் பாடலின் எண்ணிக்கை திருப்பனந்தாள் பதிப்பின் படி 1829. ஒரு அடியாரின் பாதத்திற்கு அபிடேகம் செய்த அருள் நீரைத் தலையில் தெளித்தக் கொண்டால் முத்தி அடைவாய் என்பது பாடலின் பொருள். கங்கையாடுதல், குமரியாடுதலர் போன்ற உலக தீர்த்தங்கள் வேண்டாம் அடியார் பாத தீர்த்தைத் தலைமேல் தெளித்துக் கொள். நீ வேண்டிய முத்தி பெறுவாய் என்று மூலன் சொன்னான் என்று பாடலில் வருகிறது. மூலன் சொன்னான் என்றாலேயே தெரிந்துவிடுகிறது—அது திருமூலர் பாட்டல்ல என்பது. வேறு யாரோ ஒருவர் பாடியதாக அது இருக்க வேண்டும். இதை எப்படி திருமூலர் பாட்டாக திருமந்திர மூவாயிரத்தில் ஒன்றாக சோத்து எண்ணுவது? ஆனால் சேர்த்திருக்கிறார்கள். இப்படி பதிப்புக் கோளாற்றினால் இடைச் செருகலாகவும் இடம் மாறி வந்தனவுமாக ஏறத்தாழ 800 பாடல்களைக் கூறலாம்.

அது ஒரு புறமிருக்கட்டும். கலாந்தத்தில் பொன்னுடம்பு பெறுகிறவன் நாதாந்தத்திலே ஓம் மயமாகி பிரணவதேம் பெற்று விடுகிறான். மனதத்துவம் முதல் நாததத்துவம் ஈறாக நம் உடம்பனைத்தும் பிரணவமயமாகி விட்டது என்றால் நம் ஆன்மா மாயையை விட்டு நீங்கிற்று என்ற பொருள்.

இதுவரை சகலர் என்ற நிலையில் மூன்று மலங்களையும் உடைய ஆன்மா இங்கே மாயையை விட்டு நீங்கியதால் இருமலங்கள் மட்டும் உடையதாய் பிரளயாகலர் என்ற நிலையை அடைகிறது. நம்மால் இப்படியெல்லாம் சாதிக்க முடியுமா என்று திகைக்க வேண்டாம். அனுபவங்கள் எப்படியெப்படி எல்லாம் நிகழும் என்பதை ஓர் உதாரண புருஷனை வைத்தக் கொண்டு காட்டிச் செல்லுகின்றோம்.

இப்போது அந்த உதாரண புரஷர்க்கு மாயை என்ற மலம் நீங்கிய பின் எஞ்சியுள்ள மலங்கள் 1) கன்ம மலர் 2) ஆணவமலம்.

இப்போது அவரது ஆன்மா மாயையை விட்டுத் தனித்து நிற்கிறது. எப்போதுமே ஆன்மா தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாதது எதையாவது ஒன்றைச் சார்ந்து தான் நிற்கும். அப்படி உள்ள ஆன்மா தனித்து விடப்படுவது என்றால் எப்படி இருக்கும்? திடீரென யாரையுமே அறியாத நான் மலேசியா விமானநிலையத்தில் வந்து இறங்கியது போல இருக்கும். ஆன்மாவானது தனித்து, பயந்த, திகைத்து, ஒடுங்கி ஓலமிடும். அப்போது அருந்துணை நான் இருக்கிறேன், கவலைப்படாதே! என்று அம்பிகை ஓடி வந்து காப்பாற்றுவாள். அருள் ஆன்மாவைத் தூக்கி நிற்கும். தூக்கி நின்று ஒரு கண்ணாடி காட்டுவது போல எல்லாவற்றையும் காட்டும் நம்மையும் காட்டும். அப்போது தான் முதன் முதலில் நம்மை நாமே பார்க்கிறோம். இதைத் தான் என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து என்று பாடினாள் ஔவை.

முதலில் இங்கே ஆன்மா தன்னில் தோய்ந்து ஆன்மரூபமாகிறது. அதன்பின் ஆன்ம தரிசனம் கிட்டும். இதை நாம் தசகாரியத்திரே பார்த்தோமல்லவா? ஆன்மா இன்னும் இரண்டும் மலங்களை நீத்துச் சென்று மேலேற வேண்டும். இங்கே மலங்களைத் தாண்டுதல் ஆன்ம சுத்தி எனப்படும். இப்படித் தாண்டுவதற்கு அங்கே ஆன்மா என்ன செய்ய வேண்டும்? இனிமேல் என் செயல் என்று எதுவும் இல்லை என்று அருட்சத்தித் தாயிடம்செயல்களை ஒப்புவித்து விட வேண்டும். இதைத் தான் சிவஞான போத பத்தாம் சூத்திரம் ஏகனாகி இறைபணி நிற்றல் என்று கூறுகிறது. செயலை விட்டோம் என்றால் என்ன பொருள்? வினையை விட்டோம் என்று பொருள்.

உன்னுடைய வினையை ஆண்டவனின் வினையுடன் சேர்ந்து விட்டால் உனக்கென்று வினை எதுவும் இராது. நம் நிழல் விழக்கூடாது என்றால் நாம் பெரிய நிழலில் ஒதுங்கிவிட வேண்டும். இப்படி ஆண்டவனிடம் செயல்களை ஒப்டைத்து விடுவதால் வினை என்ற கன்ம மலம் நீங்கி விடுகிறது.

இனு! எஞ்சியிருப்பது ஆணவ மலம் ஒன்று தான் இதையும்ஒழிக்க வேண்டும். ஆணவம் என்பது தன்முனைப்பு தன்னைப் பற்றிய எண்ணம். இதை விடுத்து இறைவன் திருவடியைப் பற்ற வேண்டும். முற்றிலுமாக இறைவனைச் சரணடைவது. அதாவது முன்னால் தன் செயலை ஆண்டவனிடம் ஒப்படைத்தது போல இப்போது தன்னையே ஒப்படைத்து விடுதல். இதனை ஆதம் நிவேதனம் என்பர்.

நாம் பூசையில் நிவேதனம் செய்யும் போத என்ன நினைத்துச் செய்ய வேண்டும்? நாம் கொடுக்கிற பொங்கலையா கடவுள் சாப்பிடப் போகிறார்? அப்படி அவர் சாப்பிட்டால் அந்த நிமிடமே அவர் நம்மில் ஒருவர் ஆகிவடுவார். அப்புறம் நம்முடைய நிழற்படங்களில் தோற்றம் மறைவு என்று குறிப்பது போல கடவுளுக்கும் நாள் குறித்து படம் மாட்ட வேண்டியது தான்.

உபசாரமாக பெருமானே! நான் உனக்க இதைப் படைக்கிறேன் என்று படைத்தால் கடவுள் அதை வாங்கி சண்டேசுவரருக்குக் கொடுத்து விடுவார். அப்படியானால் பொங்கலைப் படைப்பதன் பொருள் என்ன? அந்தப் பொங்கலைப் போல பெருமானே! உனக்கு என்னைக் கொடுக்கிறேன். ஏற்றுக்கொள்! என்று தன்னையே கொடுப்பது.

என்போத நைவேத்தியம் என்று இதை திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அற்புதமாகப் பாடியருளினார்.

இப்ப நினைத்துப் பாருங்க! ஏற்றுக் கொள்கிற ஆண்டவனும் சித்துப் பொருள் ஏற்கப்படும் ஆன்மாவும் சித்துப் பொருள். ஆனால் அந்தச் சித்து வேறு இந்தச் சித்து வேறு. அது எல்லாம் வல்ல பேரறிவப் பரம்பொருள். இது இறைவனையன்றி எதுவும் செய்ய இயலாத சிற்றறிவுப் பொருள். ஆனால் இரண்டுமே அறிவுப் பொருள் என்ற முறையில் மூன்று குணங்களைப் பொதுவாக உடையன. அதாவது ஆண்டவனுக்கும் அறிவு, இச்சை, செயல் உண்டு. நமக்கும் அறிவு, இச்சை, செயல் உண்டு. நமக்கு இச்சை என்றால், நம்மை அறியாமைத் துயரிலிருந்து விடுவிப்பது அவனது இச்சை. இதைக் கருணை என்போம். இந்த இச்சை அறிவு, செயல் என்ற மூன்றும் ஆண்டவனிடத்தில் எல்லையற்ற நிலையில் இருக்கிறது நம்மிடம் இவை மிகச்சிறய அளவில் உள்ளன.

நம்முடைய இச்சையை நாம் முதலில் ஆண்டவன் மீது செலுத்த வேண்டும். அப்படி நாம் நமது இச்சையை ஆண்டவன் மீது செலுத்துவதில்லை. வேறு எது எதன் மேலோ இச்சையை வைக்கிறோம். ஆண்டவன்பொறுடைிமயாக காத்திருக்கிறான். நாம் எது எதன் மேலே யெல்லாம் இச்சை வைக்கிறேதாமோ அது அதையெல்லாம் நமக்குக் கொடுத்து அனுபவிக்க வைத்து அனுபவத்தில் அந்தந்த இச்சையைக் கழிக்கிறார். இதையே வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவான் கண்டாய் என்றார் அப்பர்.

சின்ன வயதிலே எல்லோர்க்கும் ஐஸ்கிரீம் பிடிக்கும். கல்யாணம் ஆன பிறு ஐஸ்கிரீமா, பெண்டாட்டியா என்றால் போய்யா, எனக்குபட பெண்டாட்டி தான் வேணும் என்பான். வளர வளர ஆசை மாறிவிடுகிறது. முதலில் பிடித்ததில் பின்னால் உவர்ப்பு வந்து விடுகிறது. இப்ப போய், ஐயாவுக்கு என்ன வேணும்னு? கேட்டா, லாலி பாப் என்று நான் பதில் சொன்னா நல்லாவா இருக்கும்? அது ஒரு காலத்திலே எனது விழைவாக இருந்திருக்கலாம். ஒரு காலத்தில் அது உவ்ப்பாக மாறி விடுகிறது. இப்படி ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் விழைவுகளில் நமக்கு உவர்ப்பு வரும் வரை காத்திருக்கிறான் கடவுள். எப்ப என் திருவடி வேண்டுமென்று விழைகிறாயோ, அப்ப கண்டிப்பா அதைத் தரேன் என்று சொல்லிக் கடவுள் காத்திருக்கிறான்.

இவ்வாற நமது இச்சை ஆண்டவனது இச்சையோடு பொருந்தணும். பொருந்தினால் இந்த முறைமை—தோவது யோகாந்தம், கலாந்தம், நாதாந்தம் என்ற அனுபவ முறைமைகள் —பொருந்தும். இச்சையோடு

இச்சை பொருந்தியதால் வந்த விளைவு இது. அடுத்து நாதாத்தின் அனுபவ நிலைக்கு மேலாக நமது செயலை ஆண்டவனத செயலிடம் ஒக்கடைத்து வினையை ஒழித்தோம் வினை வினையோடு பொருந்தி விட்டது. இனி எஞ்சியிருப்பது அறிவு ஒன்று தான். நம்முடைய அறிவு இனி இறைவனது அறிவில் பொருந்தினால் இறைவனிடம் பரிபூரணமாக நாம் ஒன்றி விடலாம். நம்முடைய அறிவை –சீவ போதம் என்பர். இது இறைவனது அறிவான சிவபோதத்தில் ஒடுங்கினால் எல்லாம் நிறைவெய்திவிடும். தன்முனைப்பு ஒழிந்து சீவபோதம் சிவபோதத்தில் அடங்கும் அனுபவம் தான் போதாந்தம் என்று கூறப்பட்டது.

போதாந்தத்திற்குப் பின்னால் என்ன? மூன்று மலங்களும் ஒழிந்துவிட்டன. இப்போது ஆன்மாவின் மீது அருள் அருவி மாதிரி கொட்டித் திளைக்க வைக்கும். இதை அருள் வீழ்ச்சி என்று தமிழிலும், சந்திநிபாதம் என்று வடமொழியிலும் கூறவர். அருள் வீழ்ச்சியில் ஆன்மா திளைக்கம் போது அது ஞான தேகத்தைப் பெறும்.

முதலில் கலாந்தத்திலே ஆன்மா சொர்ண தேகம் பெறுகிறது பினனர் நாதர்நத்திலே பிரணவ தேகம் பெறுகிறது. அதன்பின் போதாந்தத்திற்கு மேல் ஆன்மா ஞான தேகம் பெறுகிறது.

ஞானதேகம் பெற்றவுடன் அருள்சக்தி எனப்படும் எம்பிராட்டியாகிய தாய் இதோ, உன் அப்பா சிவபெருமான் என்று காட்டும். ஞானந்தானே ஞேயத்தைக் காட்ட இயலும்!

இதன் பின் மெல்ல மெல்ல ஒளிபெருகிக் கொண்டே வரும். உடல் முழுவதும் இறையொளி நிறைந்துவிடும். அதில் ஆன்மஒளியும் கலந்து நிற்கும். சில நேரங்களில் கண்ணை மூடியதும் மங்கலாக ஒளி தெரிவது உண்டல்லவா? அதுவல்ல இது என்றாலும் அது போல என்று ஓர் உதாரணத்திற்கு வைத்துக் கொள்ளலாம். இறையொளி உடல் முழுவதும் அதாவது பிண்டம் மழுதும் ஒளியாகத் தெரியும். ஆண்டவனும் ஆன்மாவும் ஒளியாகத் தெரியும். பிண்டத்திற்குள்ளே இறைவனோடு ஆன்மா சமமாக்க கலந்து நிற்கும். சமமாக என்றால் இறைவனொட ஆன்மா சமம் என்று பொருள் பண்ணக் கூடாது. இது எல்லை பற்றிய சமம். உடம்பெல்லை முழுதும் சமமாக இப்படி இறைவனோடு ஆன்மா கலந்து நிற்றல் வேதாந்தம் எனப்படும்.

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டும்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தம் கேட்டவர் வேட்கைவிட்டாரே.

இந்தப் பாடல் எண்ணிக்கை 229. இப்பாடலைத் தவறிப் போய் பாயிரத்திலே கொண்டு போய் வைத்திருக்கிறார்கள்.

இதிலே வருகிற வேதாந்தம் என்பது ஏகான்மவாதத்தைக் குறித்தல்ல. அதே போல உபநிடத்தையும் வேதாந்தம் என்று குறிப்பிடுவதுண்டு. இங்கே சொல்லப்படும் வேதாந்தம் உபநிடத்தையும் குறிக்காது ஆதிசங்கரர் கூறிய ஏகான்ம வாதமாகிய வேதாந்தையும் குறிக்காது. வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம் என்றார் திருமூலர். வேட்கை என்பது அவாவைக் குறித்த அதன் வழி பெறப்படும் பிறவியைக் குறிக்கும் வேட்கை ஒழிந்திடம் என்ற கூறவே வேதாந்தம் என்பது இனி பிறவி இல்லை என்று உறுதியாகிற இடம். வேதாந்தம் என்பது நூல் அல்ல இனி அடுத்துப் பார்க்க இருக்கிற சித்தாந்தம் என்பதும் நூல் அல்ல அதாவது 14 சாத்திர நூல்கள் அல்ல. இவை இரண்டும் அனுபவ இடங்கள். பிண்டத்திலே இறையொளியொடு கலந்து நிற்கிற நிலை வேதாந்தம். இதையே சீவன் முத்தி என்றும் கூறுவர். ஆக,

பிண்ட அளவில் இறையொடு கலந்து நிற்றல் வேதாந்தம் அண்ட அளவில் இறையொடு கலந்து நிற்றல் சித்தாந்தம் அல்லது சித்தாந்த முத்தி.

வேதாந்தம் என்பது பற்றி இன்னும் ஒன்றைக் கூற வேண்டும். இது ஒர் ஒளி அனுபவ இடம் என்றோம். முதலில் சுழிமுனை நாடி வழியாக ஆன்ம ஒளி பரவுகிறது. அந்த ஒளி எப்படி இருக்கும்? சுழிமுனை நாடி உள்ளே அந்த ஒளி ஒரு நூல்போல இருக்கும். இவ்வாறு போய் விரியும் ஒளி நூலைத்தான் மார்பில் அணியும் பூணுலாகக் காட்டினார்கள். இந்த ஒளி நூல் அல்லாத மற்ற பூணுல் எல்லாம் வெறும் பருத்தி நூல்தான். நூலும் என்று தொடங்கும் இந்தப் பாடலில் நூலது வேதாந்தம் என்று ஒளி அனுபவ நிலையைக் குறித்தது காண்க. ஒளி நூல் உடல் நடுவே உள்ள சுழிமுனை நாடியில் விளங்குவது மார்பில் அணிந்த ஒரு பூணுல் போலத் தெரியும்அல்லவா? இந்த ஒளி நூல் கிடைக்கத் தான் பாடுபட வேண்டுமெயொழிய—இதையே அணியாகக் கொள்ள வேண்டுமே ஒழிய, பூண வேண்டியது பருத்தி நூல் அல்ல. இதைப் போய் பிரம்ம ஞானத்திற்கும் அடையாளமாகச் சொல்லலாமா? இந்த நூல் யாருக்கு வேண்டுமானாலும் கிடைக்காதா என்ன? நமது அன்பர் கலியபெரு மாளைக் கேட்டா கிலோ கணக்கிலே நூலை வாங்கிக் கொடுத்துவிட மாட்டாரா? இந்த நூலையே பெரியவர்கள் சொன்னார்கள்?

நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே என்று அப்பர் இதனால் தான் அப்படிப் பாடினார். இது திருமூலரிடம் இருந்து அப்பர் கையாண்டது. திருமூலர் தான் முதன் முதலில் நீங்கள் பூணும் நூலிலும் வைத்தக் கொள்ளும் குடுமியிலும் பெரிதாக என்ன இருக்கிறது? என்று கேட்டார். கேட்டு நூலது கார்ப்பாசம், நுண்சிகை கேசமாம் என்றும் பாடினார்.

அப்படியானால் கொள்ள வேண்டிய நூலும் சிகையும் எவை? என்பார்கருப் பதிலாக நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம் என்றும் பாடினார்.

எனவே வேதாந்த அனுபவ ஒளி நூலே பூணுல். ஞான தேகம் பெற்று ஆண்டவனை அடைவதற்காக சிரங்குவிந்து கூர்ந்து செல்கிறதே அதுவே குடுமி. சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க என்று மணிவாசகர் பாடியதும் இதையே.

குடுமி என்றால் கண் வேண்டும். அதுதான் பிரமரந்திரம். இந்த உடம்பி என்கிற எல்லையை விட்டு மேல் பக்கம் செலவதற்கு அண்டவெளியில் ஏறிச்செல்வதற்க இதுவே இடம். ஊற்றுப் பெருகும் இடத்தை ஊற்றுக் கண். இதை இடமாகக் கொண்டு வேதாந்த முத்தியில் – சீவன் முத்தியில் இருந்து – சித்தாந்தம் என்கிற ஆறாவது அந்தமாகிய அந்த அற்புதமான நிலையை அடைய வேண்டும்.

சித்தாந்தத்தைப் பற்றி திருமூலர் பாடிய பாடல்களைப் பார்ப்போம்,

சிவனைப் பரமனட் சிவனுள் காட்டும்  
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானால்  
நவமுற் றவத்தையில் ஞானம் சிவமாந்  
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தோரே

இந்தப் பாடல்களிலே உடம்புக்குள்ளே அனுபவிப்பது வேதாந்தம் அண்டத்திலே அனுபவிப்பது சித்தாந்தம என்று கருத்தக்களை அமைத்துப் பாடியுள்ளர். இவற்றையெல்லாம் நாம் தான் நழுவ விட்டோம். இதைப் பலப்பல நிலைகளிலே எடுத்துச் சொல்லியும் பலரும் இதை நழுவ விட்டனர். இன்னொரு பாடலையும் பாருங்கள்.

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்

சித்தாந்தத் தேநிற்பர் முத்திசித்தித்தவர்

சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்

சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே

சிவஞான போதத்திலும், சிவப்பிரகாசத்திலேயும் முடிந்த முந்தியில்—சித்தாந்த முத்தியில் ஆன்மாவும் ஆண்டவனும் நீரும் நிழலும் போல கலந்திருக்கம் என்று கூறப்பட்டிரக்கும்.

நீரும் பாலும் போல கலந்திருத்தல்வேதாந்த முத்தி என்கிறார் திருமூலர் ஒரு பாடலில்

இதுவரை நாம் ஆற்ந்தத்தைப் பற்றிப் பார்த்ததைத் தொகுத்துப் பார்ப்போம். முதலில் யோகாந்தத்தில் தியானம் செய்த பரம்பொருளை மனதில் தேர்ந்தெடுத்த உருவத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அது பின் அருவமாக மாறி நெற்றிக்கண்ணொளி கிடைக்கும். அதன் துணைகண்ட உடல் தத்தவங்களில் ஒவ்வொரு தத்துவமாக தாச, புத்திர, சக மார்க்கத்தில் ஏறி கடைசியில் சன்மார்கக் நிலையில் ஒவ்வொரு தத்துவத்தையும் நீங்கி மேலேறி இப்படி 36 தத்துவங்களைுயம் நீத்தல் வேண்டும். இதனையே ரூப, தரிசன, சுத்தி என்று தசாரியத்தில் வைத்தப் பெரியோர்கள் கூறினார்கள். அப்படி ஏறிவரும்போது கலை என்கிற தத்துவத்தை அடையும போது கலாந்த அனுபவம் வரும். அங்கே நமக்கு சொர்ண தேகம் அமையும். அதாவது பசுகரணங்கள் எல்லாம் பதிகரணமாக மாறி விடும். அப்போது பதிசரணமானதாலே ஆன்மா சொல்லும் மொழி நிறைமொழியாகி வடும். அது சொன்னதெல்லாம் மந்திரம்.

நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த

மறைமொழி தானே மந்திரம் என்ப

ஒரவர் கேட்டார், நான் சொன்னால் நடக்காதா? நடக்காது. காரணம் நீங்கள் பசுகரணங்களோடு இருக்கிறீர்கள். பதிகரணம் பெற்றால் உங்களுடைய மொழி குறைமொழியாக அல்லாமல் நிறைமொழியாகிவிடும். அதுவரை ஆற்றல் இல்லாத மொழியாக இருந்தது அப்போது ஆற்றல் பொதிந்த மொழியாகி விடும்.

பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்

காலனைஅன் றேவிக் கராங்கொண்ட—பாலன்

மரணம் தவிர்தததுவும் மற்றவர்க்கு நந்தம்

கரணம் போல அல்லாமை காண்.

என்று திருகளிற்றுப் படியாரிலே இது அற்புதமாக் கூற்ப்பட்டிருக்கிறது. பசுகரணம் மாறி பதிகரணம் பெறும் கலாந்த நிலை அடையும்பாது அந்த ஆன்மா சொல்வது எல்லாம் இறைவன் வாக்கு. எனவே தான் சம்பந்தர் எனதுரை தனதுரையாக என்று பாடினார்.

கலாந்த நிலையிலிருந்து மெல்ல மெல்ல மேலேற நாத தத்துவத்தின் விளிம்பில் சூக்குட வாக்கில் ஆன்மாவிற்குப் பிரணவ தேகம் அமையும். இது நாதாந்த அனுபவம். அதற்கும் மேலே போனால் மாயை என்கிற மலம் நீங்கும். அதற்கு மேல் செய்ய நமக்கென்று இல்லை எல்லாம் இறைவன் செயல் என்று இறைபணியில் ஒடுங்கும் நிலை. அங்கே கன்ம மலம் ஒழியும். பின்னால் தன்முனைப்பு ஒழிய வேண்டும். சீவபோதம் சிவபோதத்தில் ஒடுங்க ஆணவமலம் நீங்கிட போதாந்த அனுபவம் வரும். அதற்கும் மேலே செல்லும் போது அருள்வீழ்ச்சி ஏற்பட்டு ஆன்மா அருளில் திளைத்து ஞானதேகம் பெறும். ஞானதேகம் பெற்றபின் இஅறையொளி பிண்டத்துள் நடுநாடியுள் நிறைய அதனுடன் ஆன்ம ஒளி கலக்க வருவது வேதாந்த அனுபவம். இங்கே ஒளி மயத்திரே காணுகிற நூல் போன்ற ஒளியையே பூணுல் என்கிறோம். இந்த ஒளிநூல் பிரமரந்திரம் வழியாக பிண்டத்திலிருந்து மேலேறி அண்டத்தில் உள்ள இறையொளியோடு கலந்து நிற்க வருவது சித்தாந்த அனுபவம்—இதுவே சித்தாந்த முத்தி.

இவ்வாறாக யோகாந்தத்திலிருந்து சித்தாந்தம வரை ஆறந்தங்களையும் பார்த்தோம். மனம் தோய்ந்து நின்று கேட்ட இத்திருக்கூட்டத்திரல் ஓரிருவராவது இவ்வனுபவ மயற்சிகளிலே ஈடுபட்டு இறைவன் திருவடியின்பத்தில்—அந்தப் பேரா இயற்கைப் பேரின்பத்தில் தோய இவ்வுரை பயன்படுமானால் அடியேன் மிகப்பெரிய பேறுடையவன் என்று இவ்வரிய வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

ஓம் சிவம் ஓம்.